Registered as a News Paper
பொழிவு: 25
குவிப்பு: 02
பக்கங்கள்: 16
விலை: 40/-
பெப்ரவரி: 2021
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

## 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் மன்னார் மறைமாவட்டத்தின்
# ரூபி யூபிலி விழாச் சிறப்பிதழ்

## மன்னார் மறைமாவட்ட யூபிலி விழா நிகழ்வுகள்







மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40வது ஆண்டு யூபிலி விழா (1981) திருப்பலியானது கடந்த 30.01.2021 அன்று காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலய வளாகத்தில் இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு கலாநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் ஆகியோரின் வழிகாட்டுதலில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் நிறைவில் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதமும், மன்னார் மறைமாவட்டத்தின் பாதுகாவலியான மருதமடு அன்னையின் திருச்சுருப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டன. அத்தோடு மறைசாட்சிகளின் கல்லறைப் பீடத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றாலயமும் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

→ 15

## புனித யோசேப்பு ஓய்வுநிலைக் குருக்கள்
# இல்லத் திறப்பு விழா




மன்னார் மறைமாவட்டத்தில் குருக்களுக்காக அமைக்கப்பட்ட புனித யோசேப்பு ஓய்வுநிலைக் குருக்கள் இல்லமானது கடந்த 30.01.2021 அன்று காலை 10.00 மணிக்கு இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு கலாநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. மேலும் சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் முதல் இயக்குனரான அமரர் அருட்பணி. அவிதப்பர் அடிகளாரின் நினைவாக இவ் இல்லம் உருவாக பொருளாதார உதவிகளையும், செப உதவிகளையும் வழங்கிய சுவிஸ் ஆன்மீகப் பணியக தற்போதைய இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார், பணியக இறைமக்கள் அனைவரையும் மன்னார் மறைமாவட்ட ஆயர், ஓய்வுநிலை ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் சார்பாக நன்றியோடு நினைவுகூருகின்றோம்.

## வாழ்த்துகின்றோம் செபிக்கின்றோம்

### பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் 9வது ஆயர் அருட்பொழிவு தினம்



மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டு 9 ஆண்டுகள் நிறைவை 11.02.2021 அன்று நினைவு கூருகின்றார்.

தன் ஆயத்துவ பணி வாழ்வில் நல்ல ஆயனுக்குரிய அன்போடும், பாசத்தோடும், கரிசனையோடும் எம்மை வழிநடத்தி வரும் எம் பாசமுள்ள ஆயர் தந்தை ஆண்டகை அவர்களுக்கு நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

## உள்ளே...

☞ ஆயர் பேரவையின் அறிக்கை - பக்கம் 2
☞ திருநீற்றுபுதன் இம்மாத திருவழிபாட்டு தினங்கள் - பக்கம் 4
☞ மன்னார் கத்தோலிக்க திருஅவையின் ... கட்டுரைகள் - பக்கம் 5
☞ மன்னார் மறைமாவட்டம் உதயமாகி... மன்னார் மறைமாவட்ட யூபிலி சிறப்புப் பொழிவு - பக்கம் 6
☞ மறைசாட்சியரின் இரத்தம் மன்னாரின்... மன்னார் மறைமாவட்ட யூபிலி சிறப்புப் பொழிவு பக்கங்கள் 6,7
☞ கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி...பக்கங்கள் 8,9

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

### பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## யூபிலி நிறைவில் மகிழ்வோம் அன்பிய வாழ்வை ஆழமாக்குவோம்

40 வருடங்களை நன்றியோடு திரும்பிப் பார்க்கும் நாம் எதிர்வரும் புதிய சகாப்தத்தில் நம்பிக்கையோடு காலடி பதிப்போம். எமது விசுவாச வாழ்வை இன்னும் ஆழமாக்கி புதுப்பித்தல் பாதையில் அன்பிய வாழ்வில் ஒன்றிணைவோம். கடந்த 40 ஆண்டு காலப்பகுதியில் நாம் பெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கின்றோம்.

ஆண்டவருடைய பராமரிப்பின் அடையாளமாக எத்தனையோ நல்ல முயற்சிகள் எம் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்த பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன, பொதுநிலைப் பணியாளர்கள் பலர் திருச்சபை பணிகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர், தேவ அழைத்தல்கள் பெருகியுள்ளன, புதிய பங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, பல புதிய ஆலயங்கள் அபிசேகம் செய்யப்பட்டுள்ளன, புதிய பங்குமனைகள் பல திறக்கப்பட்டுள்ளன, மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணியில் பல துறவற சபைகள் கரம் கோர்த்து பல பணிகளை முன்னெடுத்து இருக்கின்றனர் அத்தோடு கடந்த 25 வருடங்களாக அன்பியங்களை உருவாக்கும் பணியில் இலங்கை திருஅவையில் மன்னார் முதலிடம் பெறுகின்றது.

ஆகவே இந்த நீண்ட கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயண பாதையில் ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் தம்மை அர்ப்பணித்துள்ளனர். தொடர்ந்து ஆண்டவரின் வலிமையான கரத்தை நினைத்துப் பார்க்கும் நாம் இறைவனுக்கு நன்றிகூறும் வேளையில் புதிய சகாப்தத்தில் நம்பிக்கையோடும், எதிர்நோக்கோடும் காலடி எடுத்து வைப்போம்.

உங்கள் அனைவருக்கும் யூபிலி நல் வாழ்த்துக்களையும் இறையாசிகளையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**அன்புடன்**
**மன்னா பதிப்பாசிரியர்,**
**அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா**

### மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

## பெப்ரவரி 2021

**02.** புனித காணிக்கை மாதா திருவிழா - மன்னார், பாலைக்குழி, சாம்பல்தோட்டம், துள்ளு குடியிருப்பு.
- புனித அன்னை வேளாங்கண்ணி திருவிழா - படகுதுறை
- புனித செங்கோல் மாதா திருவிழா - முத்தரிப்புத்துறை

**04.** இலங்கை மாதா பெருவிழா
- அம்பிட்டிய தேசிய குருத்துவ கல்லூரி விழா
- புனித செங்கோல் மாதா திருவிழா - கற்குழி

**09.** புனித வனத்து சின்னப்பர் திருவிழா - 7ம் கட்டை (பம்பைமடு)

**11.** புனித லூர்து அன்னை திருவிழா - ஜீவநகர், முதலைக்குத்தி, இரண்டாம்பண்ணை, பாசிமோட்டை, இறம்பைக்குளம், கூழாங்குளம், கீளியன்குடியிருப்பு, பிரமணாலங்குளம்,
- புனித மரியாள் - சௌத்பார்
- மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் ஆயர் - ஆயர் அபிசேகம் (2012)

**13.** புனித லூர்து அன்னை திருவிழா - மாந்தை, மரக்காரன்பளை

**22.** புனித இராயப்பர் திருவிழா- கத்தாளம்பிட்டி

## "சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் (அன்பியங்கள்) ஊடாக கிறிஸ்தவ வாழ்வின் புதுப்பித்தலை நோக்கி"

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் மேய்ப்புப்பணி மடல்

**(சென்ற மாத தொடர்ச்சி)**

எமது கடந்தகால அனுபங்கள் சொல்வது யாதெனில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) குடும்பங்களில் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், ஒருவர் ஒருவருக்கு உதவிகள் புரியவும், அன்பின் பாங்கினை கட்டியெழுப்பவும், அதன் வாயிலாக தொடக்கத் திருஅவையினை பிரதி பலிக்கவும் செய்கின்றது.

**குடும்பங்களின் பணியில் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் (அன்பியங்கள்)**

இன்றைய திருஅவையில், குடும்பங்கள் தங்களது பங்குத் திருஅவை என்கிற பெரிய (அகன்ற) குடும்பத்தினைச் சார்ந்தவர்கள் என்பதனையும் அதிலே அவர்களும் பங்களிப்பு செய்ய வேண்டியவர்கள் என்பதனையும் புரிய வைக்கின்ற "இடைநிலைக் குழுவாக" சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) நோக்கப்படுகின்றன. சுயஉறுதியில் வளரவும், உளவியல் மற்றும் சமூகத் தேவைகளை வழங்கவும் இக்குழுக்கள் உருவாக்குவதற்கான அடிப்படை மனிதத் தேவையும், மனித உரிமையுமாகும்.

எமது கிறிஸ்தவ மரபில், மனிதனை நன்கு அறிந்திருந்த இயேசு ஆண்டவர், தனது திருஅவையினை சிறிய குழுவுடன் ஆரம்பிக்க தீர்மானித்துடன், தொடர்ந்தும் சீடர்கள் மூலம் குழக்களைக் உருவாக்கிடவும் அவர்களை உற்சாகப் படுத்தினார். அந்த வகையில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) அல்லது அயலவர்கள் குழுக்கள், குடும்பங் களுக்கும் பங்கின் பெரிய குழுமங்களுக்கும் இடையிலான அத்தியாவசிய இடைநிலைக் குழுவாக (இணைப்புக்குழுவாக) செயற்படுகின்றன.

இக்குழுமங்களின் வெளிப்படையான செயற்பாடு யாதெனில் சமூக வலையமைப்பினை வழங்குவதாகும். சிறிய கிறிஸ்தவக் குழுமங்களைப் (அன்பியங்களைப்) பொறுத்தவரையில் இவ் வலையமைப்பானது இருவகையில் பொருள் பொதிந்ததாகும். அந்த வகையில், இக்குழுமங்கள் இயேசுவின் பெயரால் கூடுகின்ற நம்பிக்கையாளர்களின் குழுமங்களாகும். அவ்வாறே அவர்களது பிணைப்பானது அவர்கள் யாருக்கு சொந்தமான வர்கள் என்கிற அடையாளத்தையும், பொருளினையும் அவர் களுக்கு வழங்குகின்றது. மேலும் இவ் வலையமைப்பானது சமூக வாழ்விற்கான வாய்ப்பினை இழந்துள்ள தனிப்பெற்றோர் (தாய் அல்லது தந்தை மாத்திரம்), சிறிய குடும்பங்களுக்கும், கலப்புத் திருமண சூழ்நிலைகளால் இன்னல்களைச் சந்திக்கும் குடும்பங்களுக்கும் ஒரு பாதுகாப்பு வலையமைப்பாக செயற் படுகின்றது. இவ்வலையமைப்பில் முதியோர்கள் தாங்கள் அன்பு செய்யப்படுகின்றவர்களாகவும், வேண்டப்படுகின்றவர் களாகவும் உணர்கின்றார்கள்.

**பங்குக் குழுமங்களின் பணியில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்)**

சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) கட்டியெழுப்புவதன் இன்னுமொரு மிக முக்கிய தேவை யாதெனில் அருட்பணியாளர்கள் (பங்குத்தந்தையர்கள்) தங்களது மந்தைகளுடன் (பங்கு மக்கள்) நெருக்கமாவதற் கான களமாக அது அமைகின்றது. மக்களின் வாசனையினை அறிந்து செயலாற்றும் ஆயன்களாக மக்களுடன் நெருக்கமாக உடன் பயணிக்க திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு அடிக்கடி வலியுறுத்துவார். வாழ்வின் விளிம்பு நிலையிலுள்ள மாந்தரை நோக்கி நகர்ந்து செல்லவேண்டியதன் தேவையினைக் குறித்து திருத்தந்தை அவர்கள் அடிக்கடி விருப்புடன் பேசுவார். "செல்லுங்கள் மீண்டும் மீண்டும் சொல்கின்றேன் செல்லுங்கள் சென்று மகிழ்வின் நற்செய்தியினை நாளாந்தம் பறைசாற்றுங்கள்." இன்று எமது பங்குத் திருஅவைகளில் அதிகளவிலான காணமற்போன ஆடுகள் இருக்கின்றார்கள். சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) மக்களின் வாழ்வினைத் தொடுவதற்கான இயற்கையான வாய்ப்பினை அருட்பணியாளர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றது. இதனால் அருட்பணியாளர்கள் தன்னந்தனியாக இவற்றினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று பொருள் கிடையாது. மாறாக, பங்குத் திருஅவையில் அவர்களது சிறப்பு வழிகாட்டலின் ஊடாக, முன்மாதிரியாகவிருந்து சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) வழிநடத்தக் கூடிய பொதுநிலைத தலைவர்களை உருவாக்க வேண்யடிது அவர்களது பொறுப்பாகும்.

ஜனவரி 16, 2021 புனித ஜோசேவ்வாஸ் அடிகளாரின் பெருவிழா, அன்றிலிருந்து இலங்கைத் திருஅவைக்கு சிறிய கிறிஸ்தவக் குழுமங்களின் (அன்பியங்களின்) யூபிலி ஆண்டு ஆரம்பிப்பதுடன் அதனை ஆதரித்து ஊக்குவித்து உறுதிப்படுத்த வேண்டுமென இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பறைசாற்றுகின்றது. "கோவிட் 19" பெருந் தொற்று காரணமாக தேசிய மட்டத்திலான செயற்பாடுகள் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் மறைமாவட்டத் திருஅவைகளில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்களின் (அன்பியங்களின்) இயக்குனர்கள் தங்களது தலைமை ஆயரின் வழிகாட்டுதலுடனும், அருட்பணியாளர்கள், துறவிகள், சிறிய கிறிஸ்தவக் குழுமங்களின் (அன்பியங்களின்) தலைவர் களின் உதவியுடனும் தங்களது நிகழ்வுகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

அனைவரையும் முடக்கச் செய்துள்ள உலகளாவிய பெருந் தொற்று நிலைமை விரைவாக நீங்கி மக்களுக்கு அமைதியும், சுகமும் கிடைத்திட வேண்டியும் அருள் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கின்றோம்.

எமது பேரன்பிற்குரிய அனைத்து சகோதர சகோதரிகளையும், இலங்கையின் இராக்கினியும், பாதுகாவலியும், எமது நாட்டின் ஒரே நியதியுமாகிய புனித கன்னி மரியாவின் பரிந்துரைக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். •

## அருட்பணி. மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகளாரின் புதிய நூல்கள்




➡ 14

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி. அந்தோனிப்பிள்ளை ஜெயசீலி

மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம் அடிகளாரின் அன்புத் தாயார் திருமதி. அந்தோனிப்பிள்ளை ஜெயசீலி அவர்கள் (அடம்பன் பங்கு) கடந்த 19.01.2021 அன்று இறைபதமடைந்தார்.

இவரது பிரிவால் துயரும் அருட்பணியாளர் மற்றும் அவரது உறவுகள் அனைவருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களையும் இவரது ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாற செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

## உண்மை உறைக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# இலங்கைக்கான வத்திக்கான் திருப்பீடப் பிரதிநிதி மன்னாருக்கு விஜயம்





திருத்தந்தையின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதிநிதி அதிமேதகு கலாநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்திற்கு கடந்த 29.01.2021 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.30 மணிக்கு வருகை தந்திருந்தார்.

தள்ளாடி புனித அந்தோனியார் ஆலய வீதியிலிருந்து மோட்டார் சைக்கிள் பவனி மூலம் மன்னார் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மடு அன்னையின் திருவுருவச் சிலைக்கு முன்பாக அழைத்து வரப்பட்ட பிரதிநிதியை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளார், மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பபிரகாசம் அடிகளார், அருட் பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ செல்வம் அடைக்கலநாதன், கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. நந்தினி ஸ்ரான்லி டி மெல் மற்றும் மன்னார் நகரசபை முதல்வர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் விசேட நற்கருணை ஆசீர்வாதம் இடம்பெற்றது. ●

# மன்னார் புனித செபஸ்ரியார் திருவிழா



மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய திருவிழாவானது கடந்த 20.01.2021 அன்று காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட மேதகு ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் நடை பெற்றது. திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது. பல இக்கட்டான சூழ்நிலைகளிலும் பேராலயப் பங்குத் தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம் அடிகளாரும் உதவிப் பங்குத்தந்தையரும் இணைந்து சுகாதார விதிமுறைகளுக்கமைவாக ஆலய இறை மக்களோடு இத்திருவிழாவினை சிறப்பாக ஒழுங்கு படுத்தி இருந்தார்கள். ●

# பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலத்திற்கான பணிமனை அமைப்பதற்கு அடிக்கல் வைக்கப்பட்டது





கடந்த 31.01.2021 காலை 10.30 மணிக்கு செட்டிகுளம் பங்கில் இருந்து தனி அலகாக பிரிக்கப்பட்டு பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலத்தம் மற்றும் பெரியகட்டு பங்கு என உருவாக்கப்பட்ட பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் மேய்ப்புப்பணி பயணம் மேற்கொண்டு ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

பின்னர் காலை 11.45 மணிக்கு புதிய பங்கு பணிமனைக்கான அடிக்கல் வைத்து கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்●

# இறையியல் கல்வியகத்தின் புதிய கல்வி ஆண்டு

மன்னார் மறைமாவட்ட புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் புதிய ஆண்டு மாசி மாதம் 6.02.2021 ஆரம்பமாக இருக்கின்றது. இந்த டிப்ளோமா கற்கை நெறியில் பங்கெடுத்து பயன்பெற இயக்குனர் அன்பாக அழைத்து நிற்கின்றார். இந்த டிப்ளோமா கற்கைநெறி பொது நிலையினர் உருவாக்கத்துக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

3 வருட டிப்ளோமா கற்கைக்கு பின் சான்றிதழ் பெற்று 4ஆம் வருடத்தில் கிறிஸ்தவ கற்கைநெறி தொடர்பான கலைமானி பட்டப்படிப்பை ஆரம்பிக்க முடியும்

**தொடர்புகளுக்கு : புனித யோசேவ்வாஸ்**
**இறையியல் கல்வியகம்**
**83, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.**
**தொலைபேசி இல : 0718612610, 0773077134**

# உயிலங்குளம் பங்கில்
## உறுதிபூசுதல் அருட்சாதன நிகழ்வு



உயிலங்குளம் பங்கு புனித பேதுரு ஆலயத்தில் கடந்த 29.01.2021 அன்று மாலை 4.00 மணிக்கு 13 மணவ மாணவிகளுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை வழங்கினார். இந்நிகழ்வில் ஆயரின் செயலாளர் அருட்பணி. நீக்கிலஸ் அடிகளார், உயிலங்குளப் பங்கின் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. அன்ரன் தவராஜா அடிகளார், ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணி. மில்ரன் தேவராஜா அடிகளார் சிறப்பாக மேற் கொண்டிருந்தார்.●

# துறவற வாழ்வில் நித்திய அர்ப்பணம்



கடந்த 29.12.2020 அன்று திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி. ஜெஸ்மின் யேசுநேசன் தமது துறவற வாழ்வின் இறுதி வார்த்தைப்பாட்டை பறப்பாங்கண்டல் பங்கிலுள்ள திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் அச்சபையின் மாகாண முதல்வி அருட்சகோதரி. தியோபின் குரூஸ் அவர்களின் முன்னிலையில் பெற்றுக்கொண்டார்.

இத் திருநிகழ்விலே அருட்பணி. இராயப்பு அடிகளார், அருட்பணி. ஜெகானந்தன் அடிகளார் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

அருட்சகோதரி அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மாத திருவழிபாட்டு தினங்கள்

# புனித லூர்து அன்னை

**11.02.2021**

பிரான்ஸ் நாட்டில் 1844 ஜனவரி 7ஆம் திகதி பிரான்சுவா சுப்பிரியுஸ் மற்றும் லூயில் காஸ்தேரோ தம்பதியினருக்கு பிறந்த மகள் பெர்னதேத். இவர் பக்தியும் நல்லொழுக்கமும் உடையவர்.

1858 பெப்ரவரி 11ஆம் திகதி தன் தோழி மற்றும்



சகோதரியுடன் மாசிபேல் குகையருகில் விறகு பொறுக்கச் சென்ற போது அன்னை மரியா முதல் முதல் பெர்னதேத்திற்கு காட்சி கொடுத்தார். இக்காட்சியைப் பற்றிக் கூறும்போது "குகையினுள்ளே பொன்நிறத்திலான மேகமூட்டம் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து 16 அல்லது 17 வயதுடைய அழகான இளமையான பெண் ஒருவர் குகையிலிருந்து வெளியே வந்து ரோஜா புதருக்கு மேல் நின்று கொண்டு இருந்தார். அவர் வெண்ணிற ஆடை அணிந்திருந்தார். இடுப்பில் நீல நிறப்பட்டியும் இரு பாதங்களிலும் மஞ்சள் நிற ரோஜாப் பூக்களும் அதே நிறத்தில் செபமாலை மணிகள் கோர்க்கப்பட்ட கம்பிகளும், வெள்ளை நிறத்தில் செபமாலை மணிகளும் வைத்திருந்தார்" என பெர்னதேத் கூறினார். 1858 ஜீலை 16ஆம் திகதிக்குள் மொத்தம் 18 முறை அன்னை பெர்னதேத்திற்கு காட்சி கொடுத்தார். அதில் பலமுறை பெர்னதேத் "தங்களின் பெயர் என்ன" என்று கேட்ட போதும் 16வது காட்சியின் போது தான் "நாமே அமல உற்பவம்" என்று அன்னை மரியா தம் பெயரைக் கூறி செபமாலை செபிப்பதன் அவசியத்தைக் கூறினார். இதைக் கேள்விப்பட்டு பலர் பெர்னதேத்திடம் பல கேள்விகளைக் கேட்டு விளக்கம் பெற முயன்றனர். ஆனால் உங்களுக்கு விளக்கம் தர நான் அதிகம் படிக்கவில்லை எனக்கூறி பெர்னதேத் தாம் கண்ட காட்சிகளை கூறினார். இவருடைய அனுபவங்களை ஏற்றுக்கொண்ட திருச்சபை 1862 ஜனவரி 18ஆம் நாள் அதிகாரபூர்வமாக லூர்து அன்னையின் காட்சிகளை ஏற்றுக்கொண்டது.

1907இல் இருந்து லூர்து அன்னை விழா உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. லூர்து நகரில் எண்ணற்ற புதுமைகள் இன்றும் நடைபெற்று வருகின்றன. மேலும் "மறைசாட்சிகளின் பூமி" என அழைக்கப்படும் மன்னார் நகரில் மாந்தை பிரதேசத்திலும் ஓர் லூர்து அன்னை ஆலயம் அமைந்துள்ளது. 1520ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபைக் குருக்களால் மாந்தை மாதா கோயில் சிறு குடிசையாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இது பெரிதாக கட்டப்பட்டு ஆரோக்கிய அன்னை ஆலயமாக விளங்கியது. ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் 1670இல் இவ் ஆலயம் ஒல்லாந்தர் கைவசம் ஆனது. இக்கலாபனைக் காலத்தில் அன்னையின் சுரூபம் அவரது பக்தர்களால் எடுத்து வரப்பட்டு மடுவில் ஒரு மரபொந்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வழிபட பட்டு வந்தது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட மாந்தை மாதா சுரூபமே தற்போது "மடுமாதா", "செபமாலை மாதா" என அழைக்கப்பட்டு வருகின்றது. ●

# புனித வலன்டைன்

**14.02.2021**

தொடக்ககால மறைசாட்சியாளர்கள் பற்றிக் கூறும் குறிப்பில் புனித வலன்டைன் என்ற பெயரில் மூன்று பேர் பெப்ரவரி 14ஆம் திகதியில் குறிப்பிடப்படுகிறார்கள். ஒருவர் ஆபிரிக்காவில் மறை பணியாற்றி பல்வேறு துன்பங்களை அனுபவித்து இறந்தவர். இவரைப் பற்றி மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. மற்ற இருவரில் ஒருவர் இன்டெரன்மாவில் ஆயராகவும் மற்றவர் உரோமையில் குருவாகவும் பணி ஆற்றியவர்கள். இவர்கள் இருவருமே 3ஆம் நூற்றாண்டில் கலாபனைக் காலத்தில் கொலையுண்டு மறைசாட்சி ஆனவர்கள். உரோமையில் குருவாக இருந்த வலன்டைன் ஒரு மருத்துவரும் ஆவார். இவர் பேரரசர் 2ஆம் கிளாடியுசின் காலத்தில் மறைக்கலகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை ஆற்றினார். திருமணமான வீரர்களை விட திருமணமாகா வீரர்களே முழுத் திறனுடன் போராடுவார்கள் என்று நினைத்த பேரரசன் படைவீரர்கள் திருமணம் செய்வதைத் தடுத்தான். ஆனால் புனித வலன்டைன் இத் தடைகளை மீறி பல வீரர்களுக்கு



திருமணம் செய்து வைத்தார். இதை அறிந்த பேரரசன் அவரைக் கைது செய்து உரோமைய தெய்வத்தை வணங்கும்படி கட்டளையிட்டான். புனித வலன்டைன் மறுப்புத் தெரிவித்தமையால் கொலை செய்யப்பட்டார். புனித வலன்டைன் 270ஆம் ஆண்டு மாசி 14ஆம் திகதி தலை வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். நகர வாயிலில் இருந்து ½ km தள்ளி அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் 4ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை 1ஆம் ஜீலியஸ் பூமிக்கு அடியில் பேராலயம் ஒன்றை எழுப்பினார். காலப்போக்கில் காதலர்கள் புனித வலன்டைன்னை பாதுகாவலராக நினைத்து போற்றி வருகின்றனர். பொதுவாக வலன்டைன் நாள் எனப்படும் உலகெங்குமுள்ள மிக நெருங்கிப்பழகும் மக்கள் பலராலும் பெப்ரவரி 14 கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் ஒருவருக்கொருவர் தம் அன்பை தெரிவித்துக்கொள்வது மரபாக இருந்து வருகின்றது. எனவே இந்நாள் "அன்பர்கள் தினம்", "காதலர்கள் தினம்" என அழைக்கப்பட்டு வருகின்றது. இப் புனிதர்களும் காதலர்களுக்கு உதவியதால் கொலைசெய்யப்பட்டனர் என கூறப்படுகின்றது. இவர்கள் பெப்ரவரி 14 கொல்லப்பட்டனர். எனவே உலகெங்கும் கொண்டாடப்படும் காதலர் தினத்தன்று இவர்கள் நினைவுகூரப்படுகின்றனர். ●

# திருநீற்றுப் புதன்

**17.02.2021**

சாம்பல் புதன் என்பது விபூதி புதன், திருநீற்றுப் புதன் என்றெல்லாம் அழைக்கப்படுவதுண்டு. இது தவக்காலத்தின் தொடக்க நாள். கி.பி. 325 ஆம் ஆண்டில் இந்த சாம்பல் விழா ஆரம்பிக்கப்பட்டதாகவும், முதலில் சாம்பல் தினம் என்று அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. எனினும் திருத்தந்தை கிரகோரியின் காலமான ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் இது பிரபலமானது. தவக்காலத்தின் தொடக்க நாள் ஒரு புனித கிழமையில் ஆரம்பிக்கின்றது. இது "சாம்பல்புதன்" எனப்படுகின்றது. தவக்காலம் மனம் திரும்புதலின் காலமாகும். நம் பாவங்களுக்குப் பலியாகத் தான் இறைமகன் இயேசு உயிர்விட்டார் என்பதை மனதில் இருத்தி தன் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பும் காலம். மனம் திரும்புதலே தவக்காலத்தின் அடிப்படை சிந்தனை. சாம்பல் என்பது எல்லோராலும் நிராகரிக்கப்படும் ஒரு பொருள் உதாசீனத்தின் அடையாளம். பழைய




ஏற்பாட்டில் இறைவனிடம் மன்னிப்பு கேட்கும் மக்களும், மன்னர்களும் கோணியை ஆடையாய் அணிந்து, சாம்பலை உடலில் பூசி, சாம்பலிலே அமர்ந்து நோன்பு இருப்பார்கள். இது இறைவன் முன்னால் தாங்கள் வெறும் சாம்பல் போன்றவர்கள் என்பதை குறிப்பால் உணர்த்துகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே தவக் காலத்தின் தொடக்க நாளில் சாம்பலினால் நேற்றியில் சிலுவை அடையாளம் போடப்படுகின்றது. இந்த சிலுவை அடையாளமும் பிற்காலத்தில் வந்தது தான். ஆதிக் கிறிஸ்தவ காலத்தில் சாம்பல் புதனன்று உடலில் சாம்பலைத் தெளிப்பதே வழக்கமாக இருந்தது. எட்டாம், ஒன்பதாம் நுற்றாண்டுகளில் தான் இது நெற்றியில் சிலுவை அடையாளம் இடுவதாக மாற்றப்பட்டது. இது "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்பதை நினைவு படுத்துகின்றது. இதற்காக குருத்தோலை தினத்தில் பயன்படுத்தப்படும் ஓலைகள் அடுத்த ஆண்டு சேகரிக்கப்பட்டு எரித்து பெறப்படும் சாம்பல் பயன்படுத்தப்படுகின்றது.

**திருநீற்றுப் புதன் வழிமுறைகளில் மாற்றம்**

கோவிட் -19 பெருந்தொற்று உருவாக்கியுள்ள நெருக்கடிகளை மனதில் கொண்டு திருப்பீடத்தின் இறைவழிபாட்டு பேராயமானது இம்மாதம் 17ம் திகதி சிறப்பிக்கப்படும் திருநீற்றுப் புதனன்று பின்பற்ற வேண்டிய வழிமுறைகளில், ஒரு சில மாற்றங்களை கடந்த 12.01.2021 அன்று அறிவித்துள்ளது. திருநீற்றுப் புதன் திருப்பலியின் போது பீடத்தில் வைக்கப்பட்டுள்ள சாம்பலை ஆசீர்வதிக்கும் செபங்களை அருட்பணியாளர் கூறியபின் சாம்பலின் மீது அர்ச்சிக்கும் நீரைத் தெளிப்பார் என்றும் அதைத் தொடர்ந்து "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" அல்லது "மனிதனே மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்ற சொற்களை பீடத்தில் இருந்தவண்ணம் ஒரே ஒரு முறை மட்டுமே அருட்பணியாளர் கூறுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அருட்பணியாளர் தன் கரங்களை சுத்தப்படுத்திக் கொண்டு முகத்தில் கவசம் அணிந்து கொண்டு மக்களுக்கு சாம்பலை வழங்கும்போது அந்த சாம்பலை அவர்கள் மீது தெளிக்க வேண்டும் என்றும் அவ்வேளையில் எந்த ஒரு மந்திரத்தையும் சொல்லக்கூடாது என்றும் திருவழிபாட்டு பேராயம் அறிவித்துள்ளது. ●

# புனித பேதுருவின் தலைமைப் பீடம்

**22.02.2021**

நம் இயேசு கிறிஸ்து பேதுருவிடம் உலகம் முழுவதுக்குமான அதிகாரத்தைக் கொடுத்து தமக்குப் பிறகு தமது இடத்தில் பேதுருவைப் பணியாளராக நியமித்தார்.

"பின்பு அவர் தூய ஆவியானவரை பெறுவதற்கு முன்பு இயேசுவை அடக்கம் செய்த கல்லறையில் அவருடைய உடலைக் காணவில்லை என்று தன்னிடம் கூறிய மகதலா



மரியாவின் கூற்றிக்கிணங்க இயேசுவின் அன்புச் சீடரான யோவானுடன் முதலில் சென்று கல்லறையை பார்த்தார்". இவரின் தலைமைத்துவம் இச்செயல் மூலம் காண்பிக்கப்பட்டு உள்ளது. இவர் பெந்தகோஸ்தே விழாவின் போது தூய ஆவியானவரால் தூண்டப்பட்டு அதிகாரிகளுக்கு முன்பாக முதல் உரையை நிகழ்த்தியதோடு பல அரும் அடையாளங் களையும் செய்வித்து வேற்றினத்தாருக்கு முதன்முதலாக நற்செய்தியினையும் அறிவித்துள்ளார்.

பேதுருவின் வழியாக இயேசு தாம் செய்த அனைத்து விதமான நற்செய்திகளின் பரிமாணத்தை மீண்டும் செயற்படுத்தி உள்ளார் என்பதே இதன் நோக்கமாகும். இதனை நினைவுகூரவும் திருத்தூதர்கள் மேல் கட்டப்பட்ட திருச்சபையினது ஒற்றுமையின் அடையாளத்தை கொண்டாடவும் நான்காம் நூற்றாண்டில் இவ் விழா ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆயரின் அரியணை இருக்கும் தலைமை ஆலயம் கத்திட்ரல் எனப்படுகின்றது. இது உரோமையில் இருப்பதுபோல ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் காணப்படுகின்றது. இவற்றின் தலைமையின் கீழ் நாம் எல்லோரும் வழி நடத்தப்படுகின்றோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்ட ரூபி யூபிலி சிறப்புப் பொழிவு

# மன்னார் கத்தோலிக்கத் திருஅவையின் தனித்துவமான ஆரம்பகால வரலாறு முதல் புனித யோசேவ்வாஸ் அடிகளின் வருகை வரை

அருட்பணி. மங்களராஜா
புனித சவேரியார் குருமடம், யாழ்ப்பாணம்

**முன்னுரை**

மன்னார் மறைமாவட்டம் 1981ம் ஆண்டு ஜனவரி 24ம் திகதி யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஓர் தனி மறைமாவட்டமாக உரோமைக் கத்தோலிக்க திருஅவைத் தலைமைப்பீடத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட மையின் 40வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது இந்த மன்னார் மறைமாவட்டத்தின் தனித்துவமான வரலாற்றுப் பின்னணி வடக்கைப் பொறுத்தளவில் மட்டுமல்ல இலங்கை மற்றும் ஆசியத் திருஅவை வரலாற்றிலும் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக மன்னாரில் தற்காலக் கத்தோலிக்கத் திருஅவை அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு சில மாதங்களுக்குள்ளேயே இடம்பெற்ற 600க்கு மேற்பட்ட இப்பகுதிக் கத்தோலிக்க மக்கள் இரத்தம் சிந்தி வழங்கிய சான்றுபகரும் நிகழ்வு ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகவும், இம்மக்கள் தம் மூதாதையரைப் பற்றிப் பெருமைப்படக்கூடிய நிகழ்வாகவும், அத்துடன் இந்நிகழ்வு இன்றும் மன்னார் தீவிலும் அண்டியுள்ள மாதோட்டப் பகுதியிலும் கத்தோலிக்க திருஅவை ஆழமாக வேரூன்றி இருப்பதற்கு ஏற்ற அடித்தளமாக இருப்பதையும் நோக்கலாம். மன்னாரில் கத்தோலிக்க திருஅவை வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் போது ஆரம்பத்திலிருந்து பல கட்டங்களைக் கடந்து கத்தோலிக்க திருஅவை வளர்ந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம்.

**1ம் கட்டம் - மன்னாரில் நவீன காலத்தில் கத்தோலிக்க திருமறை அறிமுகம்**

16ம் நூற்றாண்டின் முதற்பாதியில் கத்தோலிக்க திருமறையைத் தாம் சென்று காலூன்றும் இடமெல்லாம் பரப்புவதையும் ஒரு நோக்கமாகக் கொண்ட போர்த்துக்கேயரால் இலங்கையில் குறிப்பாக இலங்கையின் முக்கிய அரசாக விளங்கிய கோட்டையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதே காலத்தில் வடக்கில் தனி அரசாக இருந்த யாழ்ப்பாணத்திலும் கத்தோலிக்க திருமறை அறிமுகமானது. இந்நாட்களில் யாழ்ப்பாண அரசில் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு அடுத்தபடியாக சனத்தொகையால் மட்டுமல்ல, வியாபாரம், போக்குவரத்து, முத்துக்குளித்தல் ஆகிய வற்றால் விசேடமாக மன்னார்த்தீவு முக்கியத்துவம் பெற்று இருந்தது. யாழ்ப்பாண அரசின் வரலாற்றை எடுத்துரைக்கும் 'யாழ்ப்பாண வைபவமாலை' எனும் மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்ட நூலில் 16ம் நூற்றாண்டின் முதற் பாதியில் கோட்டை இராசதானிக்கு வந்த மறை பணியாளர்கள் (பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள்) யாழ்ப்பாணத்திற்கு மட்டும் அல்ல மன்னாருக்கும் வந்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்நூல் இக்கால நிகழ்வுகளைத் துல்லியமாகக் குறிப்பிடுகின்றது என்றுகூற முடியாவிட்டாலும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று ஒதுக்கிவிட முடியாது. பிரான்சிஸ்கன் சபைக் குருக்களின் பிரசன்னம் கோட்டையில் 1518ம் ஆண்டிலிருந்து வந்ததும் குறிப்பாக 1543ம் ஆண்டு ஜோவாவோ டோ வில்லா டோ கொண்டே அடிகளின் தலைமையில் ஐவரைக் கொண்ட சபையினர் வந்ததும் வரலாற்று உண்மைகள். அவர்களுள் சிலர் யாழ்ப்பாண அரசுக்கும் வந்திருக்க வேண்டும். யாழ்ப்பாண அரசில் யாழ் குடாநாட்டுக்கு அடுத்தபடியாகச் சனத் தொகையிலும், கேந்திர நிலையிலும் முக்கியத்துவம் வாய்ந்த மன்னாருக்கும் இவர்கள் சென்றிருக்க வேண்டும். பிரான்சிஸ்கன் சபையினரின் வரலாற்றை எழுதிய சிவேசா (Civezza) 1542ம் ஆண்டிலேயே பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் மாதோட்டத்தில் பணியாற்றியதாகக் குறிப்பிடுகின்றார். இவற்றைக் கவனத்தில் எடுத்து வரலாற்றாசிரியர் பூடன்ஸ் அடிகள் இந்த பிரான்சிஸ்கன் குருக்களின் பணியினால் மன்னாரிலும் ஒரு கிறிஸ்தவ சமூகம் உருவாகி இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரும் அந்நாட்களில் போர்த்துக்கேய வியாபாரிகள் மன்னாரில் இருந்தமையையும், அத்துடன் சில பிரான்சிஸ்கன் சபைக்குருக்களும் இங்கு வந்து பணியாற்றி இருக்கலாம் என்பதையும் உறுதிப்படுத்துகின்றார்.

**2ம் கட்டம் - மன்னார் மறைசாட்சிகள் காலம் 1543 - 1544**

மன்னார் கத்தோலிக்க திருஅவைக்கு ஒரு தனி அடையாளத்தையும், பெருமையையும் கொடுத்தது 1544ல் மன்னார்தீவில் இடம்பெற்ற மறைசாட்சிய நிகழ்வு. அந் நிகழ்வின் தாக்கம் அப்போதிலிருந்து இப்போதுவரை மட்டு மல்ல இனியும் இருக்குமெனவே கூறவேண்டும். மன்னார் மறைசாட்சிய நிகழ்வுக்குப் பின்னணியில் இருந்த கள நிலையை சுவாமி ஞானப்பிரகாசியார் விளக்குகின்றார். மன்னாரையும் இந்தியாவையும் பிரிக்கும் கால்வாய் போன்ற கடல் வழியாகப் பன்னெடுங்காலமாகக் கடல் வர்த்தகப் போக்குவரத்து இடம்பெற்று வந்துள்ளது. ஆழம் குறைந்த இக்கடல் வழியாகப் பெரிய வாணிபக் கப்பல்கள் பயணிப்பதற் கேதுவாக மன்னார் தீவில் பொருட்களை இறக்கி ஏற்றுவதற்கு என்று பணியாளர்களும் அவர்களது குடும்பங்களும் மன்னாரில் குடியிருந்திருக்க வேண்டும். அத்துடன் மன்னார் தீவை அண்மித்துள்ள இலங்கை பெருநிலப்பரப்பில் உள்ள முசலியில் உள்ள முத்தரிப்புத்துறையிலிருந்து கரையோரமாக நீண்டு செல்லும் குதிரை மலைப்பகுதி வரை அந்நாட்களில் முத்துக்குளித்தல் இடம்பெற்று வந்துள்ளது. இம் முத்துக்குளித்தல் வருடத்தில் சில மாதங்களில் மட்டும் தான் இடம்பெற்று வந்தது வழக்கம். எஞ்சிய மாதங்களில் இந்திய தென்பகுதிகளில் முத்துக்குளித்தல் இடம்பெற்று வந்துள்ளது. எனவே இதற்காக அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் முத்துக்குளித்தலில் தேர்ச்சி பெற்றவர்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்துபோவது வழக்கமாக இருந்துவந்துள்ளது. இதனால் இங்கு சில குடியேற்றங்களும் நிரந்தரமாக ஏற்படலாயின. இதனால் இந்தியாவில் ஏற்பட்டு வந்த சமய, சமூகமாற்றங்களின் தாக்கங்கள் இங்கும் ஏற்பட்டுவந்தன.

1542ம் ஆண்டு தூத்துக்குடிக்கும் அதனையண்டியுள்ள கரையோரக் கிராமங்களுக்கும் வந்து பணியாற்றத் தொடங்கிய புனித பிரான்சிஸ் சவேரியார் மற்றும் இயேசு சபையினரதும் பணி அப்பகுதிகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தது. அக்கிராமங்களிலிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் 5,6 வருடங்களுக்கு முன்னர் திருமுழுக்குப் பெற்றிருந்தார்கள். ஆயினும் அவர்கள் பெயரளவில் தான் கிறிஸ்தவர்களாயிருந்தனர். அவர்களுள் பலருக்குத் தமக்கு வழங்கப்பட்ட கிறிஸ்தவப் பெயர்கள் மட்டுமே நினைவில் இருந்ததே தவிர மற்றும்படி அவர்கள் முன்னர் கடைப்பிடித்து வந்த அஞ்ஞான மதநம்பிக்கையையே கடைப்பிடித்து வந்தனர். இவர்களைத் கிறிஸ்தவ வாழ்க்கை முறைக்குக் கொண்டுவரச் சவேரியாரும் அவரது குழுவினரும் இரவும் பகலும் அயராது உழைக்க வேண்டியிருந்தது. சவேரியார் ஒரு தலைசிறந்த ஆசிரியராகவும் விளங்கியதால் அம்மக்களின் தேவைக்கேற்ப தமது மறைக்கல்வி முறை களையும் வடிவமைத்துக் கொண்டார். எல்லா மக்களையும் சிறுவர், இளையோர், பெண்கள், ஆண்கள், தொழிலுக்குச் செல்வோர் எல்லோரையும் உள்ளடக்கக் கூடிய விதத்தில்



படிப்பித்தல் முறைகளையும், நேர அட்டவணையையும் அமைத்துக் கொண்டார். அவர்களுக்குப் போர்த்துக்கேய மொழியில்லாது தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்பதையுணர்ந்து அங்கிருந்த சில தமிழ்ப் பண்டிதர்களதும், பயிற்சியில் இருந்த சில பரதகுல குருமட மாணவர்களதும் உதவியுடன் தமிழில் ஒரு மறைக்கல்வி நூலையும் (பனை யோலையில் எழுதப்பட்டது) தயாரித்துப் பயன்படுத்தினார். இவ்வாறாக ஒரு கிராமத்தில் ஒரு மாதம் முழுவதும் மறைக்கல்வி புகட்டி அவர்களது மறையறிவு திருப்திகரமாய் உள்ளதென உறுதிப்படுத்திய பின் அடுத்த கிராமத்துக்குச் செல்வார். அத்துடன் அவரது வேண்டுதலால் சில அருஞ் செயல்களும் (புதுமைகள்) உ+ம் - கடினமான சந்தர்ப்பங்களில் சுகப்பிரசவம் போன்றவை நிகழ்ந்தன. இவற்றாலும் பலர் கத்தோலிக்கத் திருமறையைத் தழுவினர்.

சவேரியார் அம்மக்களோடு ஒருவராக இருந்தபோது அவரது வாழ்க்கைமுறை அதிகாலை கருக்கலோடு எழுந்து கட்டளைச்செபம், தியானம், திருப்பலி ஆகியவற்றை முடித்துக் கொண்டு ஒரு கையில் சிலுவையுடன் தமது மொழி பெயர்ப்பாளருடன் வீடு வீடாகச் சென்று நோயாளிகள் மற்றும் மரணப்படுக்கையில் இருப்போரையும், திருமுழுக்குப் பெறாத சிறுவர் மற்றும் வளர்ந்தோரைப் பற்றி விசாரித்து... அவரவரது மறைக்கல்வி மற்றும் அருளடையாளங்களின் தேவைகளை நிறைவேற்றி... இவ்வாறாக இறைபணியாற்றுவதிலேயே தமது நாள் முழுவதையும் கழித்தார். அவர் ஒரு செப மனிதராகவே வாழ்ந்தார். அவரது எளிமையான, தூயவாழ்வு கத்தோலிக்கர் மத்தியில் மட்டுமல்ல பிறமதத்தவர் மத்தியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது தாழ்ச்சியான அணுகு முறைகள், எப்போதும் மகிழ்வுடன் இருக்கும் நிலை, கள்ளம் கபட மற்ற புன்னகைக்கும் முகம் ஆகியவை மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. அவர் உருவத்தில் சற்றுக் கட்டையானவராக இருந்தாலும் அவரது ஆளுமை காரணமாக அவர் 'பெரிய தந்தை' 'பரிசுத்த தந்தை' என்றும் அழைக்கப்பட்டு வந்தார்.

கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் அப்பகுதிக் கரையோரக் கிராமங்களில் சவேரியாரின் பணிகள் இடம்பெற்று வந்த காலத்தில் குறிப்பாக 1543ம் ஆண்டுக் காலப்பகுதியில் இப்பகுதிகளில் உள்ளவர்கள் மன்னாருக்கு அடிக்கடி போவதும் வருவதுமாக இருந்தமையால் மன்னாரில் உள்ள வர்களுக்கும் சவேரியார் பற்றியும் அவரது அரும் பணிகள் பற்றியும் ஒரு உயர்மதிப்பு உருவாகி இருந்தது. ஏற்கெனவே பிரான்சிஸ்கன் சபைக் குருக்களின் பணி மாதோட்டம், மன்னார் பகுதியில் ஓரளவுக்கு இடம்பெற்றுக் கொண்டிருந் தாலும் அக்கரையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த சவேரியாரின் மகத்தான பணி பற்றிய தகவல்கள் வந்து கொண்டிருந்தமையால் மன்னார் வாழ் மக்கள் தங்கள் மத்தியில் வந்தும் பணியாற்றும்படி ஒரு தூதுக்குழுவை அவரிடம் அனுப்பி வைத்ததில் வியப் பொன்றுமில்லை. இந் நாட்களில் பல்வேறு இடங்களிலிருந்து தமது இடங்களுக்கு வந்து தமது கிராமத்தவருக்கும் நற்செய்தியை அறிவித்துத் திருமுழுக்குத் தரும்படி அழைப்புக்கள் வந்துகொண்டிருந்த போதும் மன்னாரில் இருந்து வந்த அழைப்பு தனித்துவம் மிக்கதாகவும், அதற்குரிய பதிலை பிற்போட முடியாததாகவும் இருந்தது என்று அக்கால இயேசு சபை வரலாற்றாசிரியர் பார்டோலி குறிப்பிடுகின்றார். அதில் கீழைத்தேசத்தில் உருவாகிவரும் கிறீஸ்தவத்தை ஏற்கத் தயாராகிவரும் சமூகங்களில் மன்னாரில் உள்ள சமூகம் வியத்தகு பொறுமையையும், வீரத்துவம் மிக்க நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது என்று குறிப்பிடுகின்றார். மன்னாரிலிருந்து வந்த விண்ணப்பத்திற்குச் சவேரியார் பதில் நடவடிக்கையெடுக்கத் தாமதிக்கவேயில்லை. போர்த்துக்கல்லில் இருந்து கிழக்கு ஆசியாவுக்கென்று தமது மறைபணிப் பயணத்தை ஆரம்பிக்க முன்பே இலங்கை மறைப்பணியும் அவரது பணியிடங் களுக்கான பட்டியலில் இருந்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். சவேரியாரின் நண்பராயிருந்த மார்ட்டின் அபோன்சோ டி சூசா ஏற்கனவே போர்த்துக்கேய அரச பிரதிநிதியாக ஐந்து வருடங்கள் (1534-1531) பணியாற்றி இருந்தார். இவர் போர்த்துக்கல்லுக்கு வந்து 1541ம் ஆண்டு இந்தியாவின் ஆளுநராகச் செல்லவேண்டி இருந்தது. இவர் போர்த்துக்கல்லுக்கு வந்திருந்த போது சவேரியாருடன் நடந்த தகவல் பரிமாற்றத்தின் போது இலங்கையில் நற்செய்திப் பணியாற்றக் கூடிய சாதகமான நிலைமை இருப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான சில விடயங்களைப் பற்றிச் சவேரியார் இயேசு சபை முதல்வர் புனித இஞ்ஞாசியார் லொயோலாவுக்கு எழுதிய மடலில் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பின்னணியில் மன்னாரிலிருந்து வந்த தூதுக்குழு சவேரியாரை மன்னாருக்கு வந்து நற்செய்தி அறிவித்துத் திருமுழுக்குத் தரும்படி விடுத்த வேண்டுகோள் சவேரியார் தமது நீண்ட நாள் ஆசையாகிய இலங்கை சென்று மறைபணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டிய தெனலாம். அதேவேளையில் இலங்கையில் நற்செய்திப் பணி ஆற்ற ஒரு முன்சுவை சவேரியாருக்கு இதற்கு முதல் வருடம் (1543ல்) கிடைத்தது எனலாம். 1543ம் ஆண்டு ஆளுநர் மாட்டீன் அபோன்சோ டி சூசா இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையில் உள்ள அதே வேளையில் யாழ்ப்பாண அரசு தனக்குரியது எனக் கருதிய பசுத்தீவு என அப்போது அழைக்கப்பட்ட நெடுந்தீவுக்கு தனது படையுடன் வந்து சில நாட்கள் தங்கியிருந்தார். அப்போது சவேரியாரையும் நெடுந் தீவுக்கு வரவழைத்திருந்தார். சவேரியார் நெடுந்தீவில் சில நாட்களே தங்கியிருந்திருப்பார். இச்சில நாட்களில் சுதேச மக்கள் மத்தியில் அவரது மறைப்பணி பற்றி எங்கும் குறிப்பிடப்படாதிருந்தாலும் நற்செய்தியறிவிப்பதற்கு எங்கே சந்தர்ப்பம் கிடைக்கும் என்று மட்டுமல்ல. இவ்வாறான சந்தர்ப்பங்களை உருவாக்குவதிலும் பல சந்தர்ப்பங்களில் தமது ஆற்றலை வெளிப்படுத்திய சவேரியார் நெடுந்தீவிலும் கிடைத்த சில நாட்களை நிச்சயமாக இறையரசை நிறுவப் பயன்படுத்தியிருப்பார். இந்தக் குறுகிய அனுபவத்துடன் இலங்கை வருவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார். ஆயினும் மன்னாரில் இருந்து அழைப்பு வந்த சந்தர்ப்பத்தில் சவேரியார் மிகவும் நெருக்கடியான, சிக்கல் நிறைந்த சந்தர்ப்பத்தில் இருந்தார். வடக்கேயிருந்து வடுகர்கள் கன்னியாகுமாரியில் பரதகுல கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்த கிராமங்கள் மீது படையெடுத்து வந்து அம் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தனர்.

இக்கிறிஸ்தவர்கள் வேறு வழியின்றி மேற்குக் கரைக்கப்பால் உள்ள பாறைகள் நிறைந்த தீவுக்கு இடம் பெயர்ந்தனர். ஜூன் 1544ம் ஆண்டு தொடங்கிய இப்பிரச்சினை பிற இடங்களுக்கும் பரவலாயிற்று. இது போன்று இப்பகுதிகளில் வேறு சில நெருக்கடிகளும் தோன்றியதால் 1544ம் ஆண்டு இரண்டாம் பாதியில் சவேரியாரால் அவ்விடத்தை விட்டு அசைய முடியாதபடி வேலைப்பழு இருந்தது. எனவேதான் அவர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இலங்கை மறைப்பணிக்கான அழைப்பு மன்னாரில் இருந்து வந்தபோது அவரால் செல்ல முடியாது போயிற்று.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்ட ரூபி யூபிலி சிறப்புப் பொழிவு

# மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40 ஆண்டுகள் நிறைவு

**மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராக மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை**

2016ம் ஆண்டு தை மாதம் 14ம் நாள் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அப்போஸ்தலிக்க நிர்வாக ஆயராக மன்னார் மறைமாவட்டத்தை நிர்வகிக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் நியமிக்கப்பட்டார். அவருடைய காலத்தில் உருவாகிய புதிய பங்குகளும் பங்குத்தந்தையர் களும் பின்வருமாறு.

2017 யோசேவ்வாஸ் நகர் - அருட்பணி. யூட் குரூஸ், சாந்திபுரம் - அருட்பணி. யூட் ஞானறாஜ் குரூஸ் (நேரு), மாந்தை - அருட்பணி. ச. மரியதாசன் (சீமான்), சிறுத்தோப்பு - அருட்பணி. றொணிஸ் வாஸ், பொன்தீவுகண்டல் - அருட்பணி. லோறன்ஸ் லியோண்

ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை பணி ஆற்றிய காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தை அமைதியான முறையில் வழிநடத்தினார். மடுமாதா திருச் சுரூபம் ஆரம்பத்தில் இருந்த இடமாகிய மாந்தை என்னும் இடத்தில் புதிய ஆலயம் ஒன்றை 2017ம் ஆண்டு ஆசீர்வதித்து திறந்து வைத்தார். அருட்பணி. யூட் முரளிதரன் அயராது உழைத்து பலரின் உதவியைப் பெற்று இவ்வாலயத்தை அழகாக கட்டிமுடித்தார். அவரது அயராத பணிக்காக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ளு -கின்றோம். அத்தோடு பம்பைமடுவில் இறையிரக்கத்தின் ஆலயம் 2016ம் ஆண்டு மேதகு ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களினால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. அருட்பணி. ஜெகானந்தன் அதிக சிரமத்தின் மத்தியிலும் இவ்வாலயத்தைக் கட்டிமுடித்தார். அவருக்கு எமது பாராட்டுக்கள். 2017ம் ஆண்டு மார்கழி மாதம் தமது பணியை நிறைவேற்றி விட்டு தம் மறைமாவட்டமாகிய திருகோணமலைக்கு ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை திரும்பிச் சென்றார். அவரது தன்னலமற்ற சேவைக்காக மன்னார் மறைமாவட்ட மக்கள் என்றுமே நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்.

**மன்னார் மறைமாவட்ட ஆயராக மேதகு ஆயர் பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை**

2017ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் மேதகு ஆயர் பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டார் என்ற செய்தி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆயர் அவர்கள் மார்கழி 30ம் திகதி அதே ஆண்டில் மன்னார் மறைமாவட்டத்தை பொறுப்பேற்றார். மன்னார் மறைமாவட்ட மக்கள் ஆயர் தந்தையை இன்முகத்துடன் வரவேற்றனர்.

**அருட்பணி. சேவியர் குரூஸ்**
**முன்னைநாள் குருமுதல்வர்**

**ஆயர் அவர்கள் இற்றைவரைக்கும் ஏற்படுத்திய புதிய பங்குகளும் பங்குத்தந்தையர்களும்:**

2018 - மடுறோட் - அருட்பணி பா. றொசான் பரிட்சார்த்த பங்குகள் - 2020 கன்னாட்டி – அருட்பணி. அன்ரனி சோசை, மகாறம்பைக்குளம் - அருட்பணி அ. மரிய கிளைன், பெரியகட்டு (யாத்திரைகள் ஸ்தலம்) –அருட்பணி. அருள்ராஜ் குரூஸ்

**மேதகு ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை காலத்தில் இதுவரைக்கும் திருநிலைப் படுத்தப்பட்ட மறைமாவட்ட குருக்களின் பெயர்கள் பின்வருமாறு.**

2018 - அருட்பணி. றொ. மேரி பஸ்ரியன், அருட்பணி. வே. றஞ்சன் சேவியர், அருட்பணி. ம. தேவராஜன், அருட்பணி. ம. சதாஸ்கர், 2019 - அருட்பணி. லூ. ஜெஸ்மன் றாஜ், 2020 - அருட்பணி. T. ஜொலிமன், அருட்பணி. E.T.M.ஜோச் கரன், அருட்பணி. S. அருண்தாஸ் குரூஸ், அருட்பணி. P. பிரசாந்தன், அருட்பணி. G. கிருசாந் .

எமது மறைமாவட்டம் ஆரம்பத்திலிருந்து இறந்து போன மறைமாவட்ட குருக்களையும் பணி ஆற்றிய துறவறசபை குருக்களையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர்களுக்காக வேண்டுவோமாக

அருட்பணி. அன்ரூ செப்கா OMI - 24.06.1982, அருட்பணி. மேரி பஸ்ரியன் - 06.01.1985, அருட்பணி. கிருபானந்தன் 04.01.2004, அருட்பணி. T.M.ஜிம்ரோன் பவுண்ட் - 20.08.2006 (காணாமல் போனவர்), அருட்பணி. பாக்கியம் றஞ்சித் - 20.09.2007, அருட்பணி. நோபட் சீமான் பிள்ளை – 20.06.2009, அருட்பணி. L.அந்தோனி பிள்ளை OMI - 07.02.2011, அருட்பணி. பிரான்சிஸ் குலாஸ் OMI – 22.09.2011, அருட்பணி. F.X.ஜோய் கிறிஸ்தோசம் - 24.03.2012, அருட்பணி. A.விக்ரர் குரூஸ் - 04.07.2013, அருட்பணி. A.சகாய நாதன் 10.03.2015, அருட்பணி. S.V. அவிதப்பர் - 22.06.2015, அருட்பணி. செபஸ்ரியன் குரூஸ் - 19.09.2017, அருட்பணி. A.H. வேதநாயகம் - 29.11.2018, அருட்பணி. யேசுதாசன் - 23.09.2019, அருட்பணி. S.J சந்தியோகு - இந்தியா, அருட்பணி. J.B தேவராஜா – 10.08.2020.

மேதகு ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள், பொதுநிலையினர் கத்தோலிக்க திருஅவையின் படிப்பினைகளை ஆழமாக அறியவும், வேதாகமத்திற்கு சரியான விளக்கங்களைப் பெறவும், தேர்ச்சிபெற்று டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுத்தார். இதற்கென புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரியை ஏற்படுத்தி குருக்களை விரிவுரையாளர்களாக பணிசெய்யவும், இதற்கு பொறுப்பாக அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளாரையும் நியமித்தார்.

ஆயர்தந்தை தனது பணியை தொடர்ந்து செவ்வனே ஆற்றிட இறைவனை வேண்டுவோம். இந்த கொரோனா காலத்தில் ஆயர் அவர்கள் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி உள்ளது. இறைமக்கள் ஆலயம் செல்லுவது, வழிபாடுகளில் பங்குகொள்வது மிகவும் பிரச்சினையாக உள்ளது. மக்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்துவதும், கிறிஸ்துவிற்கு சாட்சிகளாக வாழ ஊக்குவிப்பதும் அவரது இக்கால பணியாகும். அத்தோடு குருக்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து இயேசுவின் மீது அன்பு கொண்டு பணிசெய்ய ஊக்குவிப்பதும், புனிதமான வாழ்வு வாழ வழிகாட்டுவதும் அவரது இக்கால பணியாகின்றது. நாற்பது ஆண்டு நிறைவை கொண்டாடி இறைவனுக்கு நன்றி செலுத்தும் இவ்வேளையில் நாம் கடந்து வந்த பாதையை தெளிவாக சிந்தித்து எதிர்காலத்தில் இறைவன் நமக்கு தரவிருக்கும் காலத்தை இன்னும் சாட்சி பகரும் வாழ்வாக எப்படி வாழமுடியும் என சிந்திப்பது நன்மை பயக்கும். வெளி கொண்டாட்ட நிகழ்வில் மாத்திரம் நின்றுவிடாமல் ஆயர் நமக்கு வழிகாட்டிய ஆன்மீக, புதுப்பித்தல் ஊடாக இறைவார்த்தையில் மேலும் ஊன்றிய வர்களாக ஆதிக்கிறிஸ்தவர்களின் பகிர்தல் வாழ்வை எமது வாழ்வாக மாற்றிடவும், குருக்கள் மக்களோடு மேலும் நல்லுறவை ஏற்படுத்தி ஆயன் மந்தை உறவிலே வளர்ச்சி அடைந்து, எமது மறைமாவட்டத்தை இறைவன் துணையோடு முன்னெடுத்துச் செல்வோமாக.

******

# மறைசாட்சியரின் இரத்தம் மன்னாரின் விசுவாசம்

**அருட்பணி பி . கிறிஸ்துநாயகம்**
**இயக்குனர்**
**திருவழிபாடு, இளையோர் ஆணைக்குழுக்கள்**
**மன்னார் மறைமாவட்டம்.**

**முன்னுரை**

வாழ்வு என்பது இறைவனின் கொடை. அந்த வாழ்வை இறைவன் எதிர்பார்க்கின்ற வகையில், சமுதாயம் விரும்பு கின்ற முறையில் வாழ்வது ஒவ்வொருவரின் சுதந்திரமும் கடமையுமாகும். அதாவது ஒருவர் நல்ல மனிதராக சமூகத்தில் வாழ வேண்டும் என்பதே எல்லோருடையவும் விருப்பமாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. ஒருவருடைய வாழ்வு, வாழுகின்ற சமூகத்திற்கு பாடமாக அமைகின்ற போது அல்லது அவர் ஒரு பேசப்படும் மனிதராக மாறும்போது அவர் ஒரு சாதனையாளராக அல்லது வரலாறு படைத்தவராகக் காணப்படுகின்றார். அது அவருடைய புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் கிடைத்த பெயராக இருக்கலாம். அல்லது தான் கொண்ட இலட்சியத்தில் செய்த தியாகமாக அல்லது தனது ஆழமான விசுவாசத்தைக் காப்பாற்றுவதற்காக செய்யப்பட்ட உயிர்த் தியாகமாகக் கூட இருக்கலாம். இங்கு நான் எழுத முற்படுபவர்கள் தாங்கள் கொண்ட உறுதியான விசுவாசத்திற்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்த 600இற்கு மேற்பட்ட மன்னார் மறைசாட்சிகளைப் பற்றியே.

மறைசாட்சியம் என்பது திருச்சபைக்கு ஒன்றும் புதியது அல்ல. திருச்சபை வளர்ந்ததே மறைசாட்சியரின் இரத்தத்தில் தான். திருச்சபையின் முதல் மறைசாட்சி புனித ஸ்தேவான் என்று எமது திருச்சபையின் வரலாறு கூறுகின்றது. திருத் தூதர்களுள் முதன்மையாளரான புனித பேதுரு சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு மறைசாட்சியானார் என்று வேதம் சொல்லுகின்றது. திருஅவை பரம்பலின் ஆணிவேர் என்று சொல்லப்படுகின்ற புனித பவுல் தலை துண்டிக்கப்பட்டு கிறிஸ்துவின் சாட்சியானார் என்பது நாம் அனைவரும் அறிந்தது. திருச்சபையைத் தொடக்கத்தில் வழிநடத்திய 31 பாப்பரசர்களில் 28 பேர் மறைசாட்சி மரணம் அடைந்தவர்கள் என்று எமது பாரம்பரியம் கூறுகின்றது. இவ்வாறானவர்களின் வரிசையில் திருச்சபைக்காக, கிறிஸ்துவுக்காக, விசுவாசத்திற் காக தங்கள் உயிரைத் துச்சமென மதித்து வாளுக்கு இரை ஆகியவர்கள் தான் எமது மூதாதையர்களாகிய மன்னார் மறைசாட்சிகள் என்று சொல்லப்படுகின்றது.

வேதசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்து' என்று திருஅவையின் தந்தையர்களில் ஒருவரான தேத்துலியன் (கி.பி.155-220) கூறுவது போன்று ஆரம்ப கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மறைசாட்சியங்கள் விசுவாசப்பரம்பலுக்கு அடிப்படைக் காரணியாக அமைந்தது. இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது அவர் மக்களுக்கு உரைத்த அன்புப் போதனையாலும், செய்த புதுமைகளினாலும், அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட உயிர்ப்பு அனுபவத்தி னாலும் ஆட்கொள்ளப்பட்ட யூத மதத்தவர்களும் பிற இனத்தவர்களும் கிறிஸ்துவையும் கிறிஸ்தவக் கொள்கை களையும் பின்பற்றத் தொடங்கினர். இச்செயற்பாடானது யூத மதத்தின் இருப்பிற்கும், உரோமைய சாம்ராச்சியத்தின் அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கும் பேரரசின் இறையாண்மைக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திய மையால் இக்கொள்கையை பின்பற்றியவர்கள் பல்வேறு விதங்களிலே துன்புறுத்தப்பட்டனர். இதன் காரணமாக கிறிஸ்தவத்தை பின்பற்றிய மக்கள் தமது உயிரைக் காத்துக்கொள்ள நாற்றிசைகளுக்கும் சிதறி ஓடினர்.

இவ்வாறாக இம்மக்கள் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றாலும் தங்களிடம் இருந்த இறை நம்பிக்கையை பாதுகாத்துக் கொண்டவர்களாக சென்ற இடங்களில் எல்லாம் கிறிஸ்துவிற்கு சான்று பகர்ந்தனர். எனவே கிறிஸ்தவர்கள் சென்ற இடங்களிலும் கிறிஸ்தவம் வேர்விடத் தொடங்கியது இதனால் அந்தந்த இடங்களிலும் வேதசாட்சி மரணங்களும் நிகழத் தொடங்கின.

அது போலவே மன்னார்த் தீவிலும் ஏறக்குறைய 600க்கு மேற்பட்ட புதிதாகத் திருமுழுக்குப் பெற்று திருமறையில் சேர்ந்த கிறிஸ்தவர்கள் 1544ம் ஆண்டு சங்கிலி மன்னனால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள் என்று கூறுகின்றது எமது வரலாறு. கிறிஸ்தவத்தில் இருந்து மீண்டும் தமது முன்னைய மதத்திற்கு மாறுகின்ற போது அவர்களுடைய உயிரைக் காத்துக்கொள்ளலாம் என்ற தெரிவு அவர்கள் முன்னே கொடுக்கப்பட்ட போதும் கூட, வாழுவதை விட கிறிஸ்துவுக்காக சாவதே மேல் என்று துணிந்து இரத்தம் சிந்தியவர்கள் தான் எமது மறைசாட்சிகள். எனவே இச் சிறிய கட்டுரையில் இவர்களுடைய வரலாறு பற்றி சற்று ஆழமாக ஆராய விளைகின்றேன்.

**16ம் நூற்றாண்டில் மன்னார் தீவு**

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு மாவட்டமாகும். மன்னார் மாவட்டமே இந்தியாவிற்கு மிக அருகாமையில் உள்ள மாவட்டமாகும். இம்மாவட்டமானது மன்னார் தீவு, மாதோட்ட பெருநிலப்பரப்பு என்ற இரு பெரும் பகுதிகளை உள்ளடக்கியதாகும். இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு திசைகளில் உள்ள 9 தீவுகளில் மன்னார் தீவு மிகப்பெரிய தீவாக விளங்குகின்றது. இத்தீவானது ஏறத்தாழ 130 சதுர கிலோமீற்றர் பரப்புடையது என்று சொல்லப்படுகின்றது. நீண்ட காலமாக தென்னிந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே சமூக, வாணிப மற்றும் அரசியல் தொடர்புகளைப் பரிமாறிக் கொள்வதில் ஒரு கேந்திர மையமாக மன்னார்த்தீவு விளங்கியது என்று வரலாறு கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட ரூபி யூபிலி சிறப்புப் பொழிவு

16ம் நூற்றாண்டுக்கு முன்னர் மன்னார் தீவு பல வரலாற்று நிகழ்வுகளைச் சந்தித்திருந்தாலும் போர்த்துக்கேயர் மன்னார்த் தீவைக் கைப்பற்றி தமது இராணுவ பாதுகாப்பு நலன்கருதி மன்னார்த்தீவில் கோட்டை ஒன்றைக் கட்டியதுடன் தமது நிர்வாகக் கட்டமைப்பினை வலுவாக்கியதன் பின்னர் தொடர்ந்து ஒல்லாந்தர், பிரித்தானியர் காலங்களில் அது மன்னாரின் மைய நகராக வளர்ச்சி அடைந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது எனலாம். வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி கி.பி 12ம் நூற்றாண்டின் பிற் பகுதியில் மாந்தைத் துறைமுகநகர் வீழ்ச்சியடைகின்றது. இதனால் ஏறத்தாழ 4 நூற்றாண்டுகளாக மன்னார் பிரதேசத் துக்கென தனித்துவமான வளர்ச்சியடைந்த நகர் இருக்கவில்லை. மன்னார்த்தீவில் தலைமன்னார், சவுத்பார், எருக்கலம்பிட்டி, சாந்தோம் பட்டினம் போன்ற பழைய துறைமுகங்கள் இருந்தன. (வித்துக்கள்: மன்னார் மறைசாட்சிகளின் 475 ஆண்டு விழா மலர். பக்.79)

மன்னார் பகுதி குறிப்பாக மன்னார் தீவு யாழ்ப்பாண அரசின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்தாலும் இப்பகுதி மக்கள் தென் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பை பேணி வந்தனர். தென் இந்திய கரையோர மக்கள் மீன்பிடி தொழிலின் நிமிர்த்தம் மன்னார் தீவின் கரையோரத்திலே வந்து தங்கிச்செல்வது ஒரு பக்கம் இருக்க பெரும் செல்வத்தை தேடிக் கொடுத்த முத்துக்குளித்தல் வியாபாரம் மன்னார் கடற்கரைப் பிரதேசங்களிலே சிறப்பாக நடைபெற்றதால் இத்தொழிலிலே ஈடுபட்ட வியாபரிகளும் தொழிலாளர்களும் தமிழகத்திலிருந்து மன்னாரை நோக்கி அதிகமாக திரண்டு வரத்தொடங்கினர். (ச. வி. ப. மங்களராஜா, (2016) "சிதறிய முத்துக்கள்" வடக்கு திருச்சபை வரலாற்றுக் கட்டுரைகள், பக். 4)

16ம் நூற்றாண்டில் மன்னார் தீவு என்பது இயேசுவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் தீவு என அழைக்கப் பட்டது. இக் காலத்தில் பணியாற்றிய இயேசு சபைப் பணியாளர்களும், பிரான்சிஸ்கன் சபைப் பணியாளர்களும் மன்னார் தீவை பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கும் அர்ப்பணித்து 12 ஆலயங்கள் கட்டியிருந்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது. புனித தோமையார் பட்டணம் - எருக்கலம்பிட்டி, புனித இராயப்பர் ஆலயம் - றாணாபாடு, புனித யாகப்பர் ஆலயம் - கட்டுக்காரன் குடியிருப்பு, புனித பார்த்தலமேயு ஆலயம் - ஓலைத்தொடுவாய், புனித யூதாததேயு ஆலயம் - சவுத்பார், புனித அந்திரேயா அப்போஸ்தலர் - தோட்டவெளி இந்த ஆறு ஆலயங்கள் தான் இன்று எம் மன்னார் தீவில் இருக்கின்றன. ஏனைய ஆறு ஆலயங்களும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டன.

### மன்னார் மறைசாட்சிகள்

புனித பிரான்சிஸ் சவேரியார் 1542ம் ஆண்டு இந்தியாவிலே தூத்துக்குடி என்னும் கடற்கரைப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு கத்தோலிக்க மறையைப் போதித்து திருமுழுக்குக் கொடுத்து வந்தார். இவ்வாறு அவரிடம் திருமுழுக்குப் பெற்ற இம் மக்கள் 1543ம் ஆண்டு தூத்துக்குடி யிலிருந்து பல்வேறு காரணங்களுக்காக இலங்கைக்கு குடிபெயர்ந்து கொண்டிருந்தார்கள். இதனால் அவர்களுடன் ஒரு குருவை அனுப்ப 1544ம் ஆண்டு புனித பிரான்சிஸ் சவேரியார் முயற்சியெடுத்தார். அதேவேளை மன்னார்த் தீவில் வாழ்ந்த இந்து மக்களும் தமக்கு வந்து போதித்து திருமுழுக்குத் தரும்படி அழைப்பு விடுத்திருந்தார்கள்.

புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியாவிலே ஏற்கனவே பல பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபடியால் தனது பெயர் கொண்ட பிரான்சிஸ் சவேரியார் என்னும் திருத்தொண்டரை மன்னாருக்கு அனுப்பி வைத்தார் என்று வரலாறு கூறுகின்றது. பார்த்தோலி என்னும் வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சவேரியாரிடம் வந்து தங்களது நாட்டிலும் வேதமறையைப் பரப்பி தங்களுக்கு வெளிச்சத்தைக் காட்டும்படி கேட்டவர்களில் முதன்மையானவர்களும், புகழுக் குரியவர்களும் மன்னார் பகுதி மக்களே ஆவர்" என்று ஒரு புத்தகத்தில் எழுதியுள்ளார்.

புனித பிரான்சிஸ் சவேரியார் 1544ம் ஆண்டு ஐப்பசி மாதம் தனக்குப் பதிலாக தனது பெயர்கொண்ட ஒரு திருத் தொண்டரை மன்னார்த் தீவிற்கு அனுப்பினார் என்று மேலே பார்த்தோம். இதனால் புதிய மதத்தில் சேர்வதற்கு மிகவும் ஆவலாகவும், ஆர்வமாகவும் இருந்த மன்னார் மக்கள் திருத்தொண்டர் பிரான்சிஸ் சவேரியாரை அன்புடன் வரவேற்று அவரது போதனையைக் கேட்டு கத்தோலிக்க திருமறையை விசுவசித்து அதனை ஏற்றுக் கொண்டனர். எனவே திருத்தொண்டர் அவர்கள் கத்தோலிக்க திருஅவையின் முறைப்படி சரியான மறைக்கல்வியை அவர்களுக்குப் போதித்து ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் இந்து மக்களுக்கு திருமுழுக்கு கொடுத்தார் (அருட்தந்தை. பேணியோலா 'இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை' என்னும் புத்தகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார். காண்க 1983 பக். 49 ---50) "கத்தோலிக்க திருஅவையின் சரியான சடங்கு முறைப்படி அவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கப் பட்டது. இவ்வாறு ஆயிரத்திற்கும் அதிகமான மன்னார் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு கத்தோலிக்கர்களாக மாறினர்".

இம்மதமாற்ற நிகழ்வானது மன்னார்த்தீவை தனது ஆட்சியின் கீழ் கொண்டிருந்த யாழ்ப்பாண அரசன் சங்கிலி-1 அதாவது 7ம் செகராசசேகரன் மன்னனுக்குத் தெரியாது இருந்தது. இதனால் யாழ்ப்பாண அரசில் முக்கிய இடம் வகித்த சைவ



இந்து குருக்கள் இச்செய்தியை சங்கிலி அரசனுக்குத் தெரியப்படுத்தினர். இதனால் கோபமடைந்த மன்னன் செகராச சேகரன் மன்னார் மக்கள் திருமுழுக்குப் பெறுவதைத் தடுக்கும்படி மன்னார்த் தீவிலுள்ள தனது கடற்படையினருக்கு அறிவித்தான். அதுமட்டுமன்றி மதம்மாறிய மக்களை மீண்டும் இந்து மதத்திற்கு மாறும்படி வலியுறுத்தச் சொன்னான். அப்படி அவர்கள் மீண்டும் சைவ மதத்திற்கு மாறாவிட்டால் கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் அறிவித்தான். இது இவ்வாறு நடந்து கொண்டு இருக்கும் போது மன்னன் எதிர்பாராத நிகழ்வு ஒன்று நடந்தது. அதுதான் அவனுடைய மகன் இளஞ்சிங்கனுடைய மதமாற்றம். தனது மகனும் மதம் மாறிவிட்டான் என்பதைக் கேள்வியுற்ற அரசன் மிகுந்த அதிர்ச்சியும், ஆத்திரமும் கொண்டான்.

நிலமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போவதையும் புதிதாகத் திருமுழுக்குப் பெற்று திருமறையில் சேர்ந்த புதுக்கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க நம்பிக்கையில் ஊறிவிட்டதையும் அவதானித்த சைவக் குருக்கள் இவை அனைத்தையும் தமது அரசனுக்குத் தெரிவித்தனர். செய்வதறியாது திகைத்த அரசன் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்னும் முனைப்புடன் செயல்பட்டான். இதனால் 1544ம் ஆண்டு தை மாதம் யாழ்ப்பாணத்திற்கும், மாதோட்டத்திற்குமாக 1000க்கும் மேற்பட்ட படைவீரர்களை அனுப்பியது மட்டுமல்லாது அப்புதிய கத்தோலிக்கர்கள் தமது மறையைக் கைவிட வேண்டும் என்று அரச ஆணையும் பிறப்பித்தான். ஆனால் அவர்களோ தமது நம்பிக்கையில் ஊன்றியிருந்தார்கள். புதிய திருமறையைக் கைவிடுவதற்கு மறுத்து விட்டார்கள். அதனால் மன்னார்த்தீவில் புதிதாக திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் கொல்லும்படி அரசன் கட்டளையிட்டான். அரச கட்டளையின் படி ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என ஏறக்குறைய 600 இற்கு மேற்பட்டவர்கள் மறைசாட்சிகளாகத் தமது உயிரை அர்ப்பணித்தார்கள்.

மன்னார் மறைசாட்சிகளின் நிகழ்வு நடைபெற்றதை தொடர்ந்து இந்தியாவிலிருந்த பிரான்சிஸ் சவேரியார் 1545 ஆம் ஆண்டு தை மாதம் 27ம் திகதி உரோமில் இருந்த தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில், வேதசாட்சிகளுக்கு இங்கு குறைவில்லை என்றும், அவ்விசுவாசிகள் தங்களின் உயிரை ஈந்ததையிட்டு தான் கடவுளுக்கு நன்றி செலுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். சங்கிலி அரசனின் சகோதரன் தனது அண்ணணிடமிருந்து விலகி வேறொரு இடத்தில் இருப்பதாகவும் போர்த்துக்கேய ஆளுநன் யாழ்ப்பாண இராட்சியத்தை கைப்பற்றி அரசனை அதிகாரத்திலிருந்து நீக்கினால் தானும் தன்னுடைய சகாக்களும் கிறிஸ்தவ மதத்தை தழுவத் தயாராக இருப்பதாகவும் தனக்குத் தெரியப்படுத்தி உள்ளான் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிடுகின்றார். இவ்வாறுதான் எமது மூதாதையர்கள் தமது ஆழமான விசுவாசத்தை நிரூபித்தார்கள்.

### மன்னார் மறைசாட்சியரின் பாதையில்

மன்னார் மறைசாட்சிகள் எமக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு. தாம் கொண்ட விசுவாசத்தில் இறுதித்துளி இரத்தம் வரைக்கும் நிலைத்து நின்ற தியாகிகள். அவர்கள் மன்னார்த் திருச் சபையின் வித்துக்கள். இன்று மன்னார் மறைமாவட்டம் 90 ஆயிரத்திற்கு மேற்பட்ட கத்தோலிக்கர்களைக் கொண்டதாகவும், ஏனைய மறைமாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிகூடிய விகிதாசாரத்தைக் கொண்ட மறைமாவட்டமாகவும் திகழ்கின்றது என்றால் அது எம் மூதாதையர்களின் இரத்தத்தில் கட்டப்பட்ட விசுவாசத்தினால் விளைந்ததே ஆகும்.

எமது மறைசாட்சிகளின் தியாகத்தை நாம் ஒரு போதும் மறக்கலாகாது. 1991ம் ஆண்டில் எமது மூதாதையர்கள் கொல்லப்பட்ட 450வது ஆண்டை நினைவுகூர்ந்து அப்போதைய மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் சிந்தனையில் அப்போதைய தேவ அழைத்தல் இயக்குனர் அருட்பணி பி.யேசுராஜா அடிகளாரின் வழிநடத்துதலில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்களாகிய நாங்கள் "வித்துக்கள்" என்னும் வேதசாட்சி களின் நாட்டுக்கூத்தை மறைமாவட்டத்தின் ஆறு பங்குகளில் மேடையேற்றினோம். அந்நிகழ்வின் ஊடாக வேதசாட்சிகளுடைய வரலாறு பலருக்குத் தெரிய வந்தது. அத்துடன் பலரின் மனதையும் தொட்டது. அதாவது இந் நாட்டுக்கூத்தானது எமது மக்கள் மத்தியில் ஒரு மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியதை நாம் கண்கூடாகக் கண்டோம்.

எமது மறைசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்காக பல தசாப்தங்களாக எமது ஆயர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது தனிப்பட்ட முயற்சிகளும் அதிகரிக்க வேண்டும். முதலாவதாக இத்தியாகிகளை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கு எமது செபங்களுடன் கூடிய செயற்பாடுகளும் தேவை, மக்கள் மத்தியில் கூடுதலான விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் தனிப்பட்ட திறமையுடைய எழுத்தாளர்களும் தமது எழுதுகோலை இவ் உயரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக இத்தியாகிகளுடைய வாழ்வு 475 ஆண்டுகளைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். வெறுமனே அவர்களுடைய வீர தியாகத்தை நினைந்து எமது மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் இரத்தத்தால் தோய்ந்தது என்று பெருமை கொள்வதோடு மட்டும் நின்றுவிடாது, அவர்களின் விசுவாசத் தியாகம் எம்மையும் இயேசுவில் ஆழமான விசுவாசம் கொள்ள அழைக்கின்றது என்ற உண்மையை உணர வேண்டும். எமது மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ் வேளையில் இந்த 40 ஆண்டுகளும் எமது விசுவாசப்பயணம் மறைமாவட்டமாக அல்லது பங்காக அல்லது தனிப்பட்ட ரீதியில் எவ்வாறு இருந்தது என்பதை நாம் விசுவாசக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

எம்முடைய வாழ்க்கைப் பயணத்திலே பல துன்பங்கள் ஏற்பட்டது. இந்த 40 ஆண்டுகளிலே மிகப்பெரிய போர் ஒன்றைச் சந்தித்த மக்கள் நாம். அந்த போரிலே ஏற்பட்ட இழப்புகளும், இடையூறுகளும், ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு நிலையில் எம் விசுவாசத்திற்கு சவாலாக இருந்திருக்கலாம். அதுமட்டுமன்றி எல்லாவற்றையும் கடந்து இன்று நாம் அனுபவிக்கும் கொரோணா வைரஸ் என்னும் கிருமியின் தாக்கமும் அதனால் ஏற்பட்ட வழிபாட்டுத் தடங்கல்களும் சில வேளைகளில் எமது விசுவாசத்தை ஆட்டம் காணச் செய்திருக்கலாம். ஆனால் இவை எல்லாமே எம்மை விசுவாசத்தில் ஆழப்படுத்தும் ஆன்மீக வாழ்க்கைப் பயணங்கள். இப் பயணத்தில் தடைகளைக் கடந்து, சவால்களை முறியடித்து துணிவுடன் இயேசுவே எமக்கு எல்லாம் என்று நடக்கின்ற போது தான் எமது மூதாதையர்கள் சிந்திய இரத்தம் தோய்ந்த மண்ணில் வாழும் எமது கிறிஸ்தவ வாழ்வும் அர்த்தம் பெறும்.

எனவே 475வது ஆண்டில் வேதசாட்சிகளின் மரண ஓலத்தின் யூபிலியாக இருந்தால் என்ன, 40வது ஆண்டின் மறைமாவட்டதின் யூபிலியாக இருந்தால் என்ன எல்லாமே எம்மையும் அவை வெளிப்படுத்தும் ஒரு உன்னத வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் போதுதான் அர்த்தம் பெறுகின்றது. தூய்மையான முழுமையான அர்ப்பணிப்புள்ள புதுப்பித்தலை நோக்கிய வாழ்வுக்கு வேதசாட்சிகளின் தியாக மரணம் எம்மை அழைத்துச் செல்வதாக.

**"வேதசாட்சிகள் விசுவாசத்தின் வித்துக்கள்"**


**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1000/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 4000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் மன்னார் மறைம

# கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய மன்

**மன்னார் மறைமாவட்டம் - ஒரு பார்வை**

"விசுவாசத்தின் விளைநிலம்" என்று எல்லோராலும் போற்றப்படும் மன்னார் மறைமாவட்டமானது 1981ஆம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது. முதவாவது ஆயராக பேரருட்திரு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்களும், இரண்டாவது ஆயராக பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும், அப்போஸ்தலிக்க பரிபாலகராக பேரருட்திரு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையும் எம் மறை மாவட்டத்தை சிறப்புற வழிநடத்தி வந்தனர். இவர்களைத் தொடர்ந்து தற்போதைய ஆயராக பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் எம்மை வழிநடத்தி வருகின்றார்.

மன்னார் மறைமாவட்டமானது நான்கு மறைக்கோட்டங் களையும், 42 பங்குகளையும், இரண்டு பரிட்சார்த்தப் பங்குகளையும், 89,883 குடும்பங்களையும், 376,657 கத்தோலிக்க இறைமக்களையும், இரண்டு முக்கிய திருத்தலங்களையும, மூன்று சிறிய திருத்தலங்களையும், மூன்று தவக்கால யாத்திரை ஸ்தலங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

மேலும் 150 அருட்தந்தையர்களையும், 33 அருட்சகோதர்களையும், 252 அருட்சகோதரிகளையும் உருவாக்கி அதிகூடிய தேவ அழைத்தல்களையும், கத்தோலிக்க மக்களையும் கொண்ட மறைமாவட்டமாக விளங்குகின்றது.

### முதல் ஆயர் - மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



இவர் மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் 1981.01.24 அன்று நியமிக்கப்பட்டு 1981.07.30 அன்று மடுத்திருப்பதியில் திருநிலைப் படுத்தப்பட்டார்.

03.08.1981 அன்று மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் உத்தியோக பூர்வமாக மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்று 11 வருடங்கள் அதாவது 20.10.1992 வரை சிறப்புற வழி நடத்தினார். தற்போது ஓய்வு நிலையில் உள்ளார்.

### முன்னாள் ஆயர் - மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை



மன்னார் மறைமாவட்டத்தை வழிநடத்த 2வது ஆயராக திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் 1992.07.06 அன்று நியமிக்கப்பட்ட இவர் 1992.10.20 அன்று மடுத்திருப்பதியில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

மன்னார் பேராலயத்திலே வைத்து மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்று அன்றிலிருந்து தொடர்ந்த தன் ஆயத்துவப் பணியை 24 வருடங்கள் சிறப்புற ஆற்றி தன் மந்தைகளை நல்லாயனாக இருந்து வழிநடத்தி தற்போது ஓய்வு பெற்று வருகின்றார்.

### அப்போஸ்தலிக்க பரிபாலகர் - மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை



ஆயனின்றி தவித்த மந்தையை வழிநடத்த 14.01.2016 அன்று மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராகப் பொறுப்பேற்றார்.

இரண்டு வருடங்கள் தனது மேய்ப்புப் பணியை நிறைவாய் செய்து மறை மாவட்டத்தை சிறப்பாக வழிநடத்தி மீண்டும் தனது மறைமாவட்டமான திருகோண மலைக்குத் திரும்பினார். தற்போது ஓய்வு நிலையில் உள்ளார்.

### இந்நாள் ஆயர் - மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை



1978.01.06 இல் குருவாகவும், 2012.02.11இல் ஆயராகவும் அபிசேகம் செய்யப்பட்ட இவர் 2017.11.20 அன்று மன்னார் மறை மாவட்டத்தை வழிநடத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டார்.

2017.12.30 அன்று மறைமாவட்டத்தை மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார். அன்று முதல் இன்று வரை தனது ஆயத்துவ பணியை தந்தைக்குரிய பாசத்தோடு சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்.

### முதல் குருமுதலர்வர் - அருட்பணி . சேவியர் குரூஸ் அடிகளார்



எமது மறைமாவட்டத்தின் மூத்த குருவான இவர் மன்னார் மறைமாவட்டத்தின் முதலாவது குருமுதல்வராக 1981.07.21 அன்று பொறுப்பேற்றார்.

பல இன்னல்களுக்கு மத்தியிலும் தளராது ஆயர் தந்தையுடன் இணைந்து சிறந்த துணையாளராக இருந்து இருபத்தைந்து வருடங்கள் தனது மேய்ப்புப் பணியால் எமது மறைமாவட்டத்தை வழிநடத்தி தற்போது ஓய்வு நிலையில் உள்ளார்.

### இந்நாள் குருமுதலர்வர் - அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தின் அடுத்த குருமுதல்வராக 19.08.2006 இல் பொறுப் பேற்ற இவர் 15 வருடங்களாக தன் பணியை சிறப்பாக ஆற்றிக் கொண்டிருக்கின்றார்.

மேலும் இவ் பணிக்காலப் பகுதியில் மன்னார் மறைமாவட்டம் தொடர்பான அனைத்து விபரங்களையும் ஒன்று திரட்டி 40வது வருட யூபிலி விழாவையொட்டிய "மன்னார் மறைமாவட்ட வரலாற்று விபரக் கோவை" என்ற நூலை வெளியிட காரணமாயிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## திருத்தலங்கள்

மருதமடு மாதா திருத்தலம்




பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலம்



மாந்தை புனித லூர்து அ
திருத்தலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட உதயத்தின் ரூபி யூபிலி விழா சிறப்புப் பக்கம்

# ன்னார் மறைமாவட்டத்தின் பயணம் தொடர்கின்றது...

## ஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்கள்

### அன்பியம்

1997.08.18 அன்று ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் அருட்பணி. C. அந்தோனிதாஸ் டலிமா அடிகளாரை இயக்குனராக கொண்டு இவ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. 25.07.2003 வரையான இவரது பணிக்குபின் அருட்பணியாளர்களான. A.யூட் குரூஸ் (20.08.2003 - 11.05.2008), S. டக்ளஸ் மில்ரன் லோகு (19.05.2008 - 10.10.2014), A.ஆரோக்கியம் (10.10.2014 - 08.07.2018) ஆகியோர் பணியாற்றினர்.

தற்போதைய இயக்குனராக அருட்பணி. S.சவுல்நாதன் பணியாற்றுகின்றார். மேலும் இவ் ஆணைக்குழுவானது மறைமாவட்ட ரீதியாக 1200 அன்பிய குழுக்களையும், 1510 அன்பிய பணியாளர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது.

### மறைகல்வி, திருவிவிலியம்

முதல் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் 27.01.1987இல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் அருட்பணியாளர்களான S.J.இராஜநாயகம், A.பிலிப் IVD (1982 - 1989), T.நவரெட்ணம் (1989 - 1995), A.பிலிப் IVD (1995 - 1997), C.அந்தோனிதாஸ் டலிமா (1997 - 15.12.1998), B.F.டெஸ்மன் குலாஸ் (15.12.1998 31.07.2003), P.கிறிஸ்து நேசரெட்ணம் (01.08.2003 - 05.01.2009), M. ஜெயபாலன் (05.01.2009 - 22.05.2011), X.F.றெஜினோல்ட் (23.05.2011 - 09.07.2018) ஆகியோர் பணியாற்றினார்கள். மேலும் அருட்பணியாளர்களான ஸ்ரனி அன்ரனி OMI (15.12.2008 - 18.03.2010), S. டக்ளஸ் மில்ரன் லோகு (19.03.2010 - 09.10.2014), S.நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் (10.10.2014 - 24.06.2016), X.F.றெஜினோல்ட் (01.09.2016 - 09.07.2018) ஆகியோர் திருவிவிலிய ஆணைக்குழு இயக்குனர்களாக பணியாற்றினர். இவ் ஆணைக்குழுக்களின் தற்போதைய இயக்குனராக அருட்பணி. C.அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் பணியாற்றுகின்றார்.

### குடும்பம், பொதுநிலையினர்

முன்னாள் குருமுதல்வர் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளாரால் அருட்பணி. D.P.தேவசகாயம் அடிகளாரை இயக்குனராக கொண்டு 03.06.1982இல் இவ் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. 1990 - 2000 வரையான காலப்பகுதியில் அருட்பணியாளர்களான அமரர். S.நோபேட், Y.தேவசகாயம்பிள்ளை ஆகியோர் இயக்குனர்களாகப் பணியாற்றினர். இவர்களைத் தொடர்ந்து அருட்பணியாளர்களான A. விக்ரர் சோசை (01.10.2000 - 18.08.2006), C.அந்தோனிதாஸ் டலிமா (19.08.2006 - 26.04.2009), A. செபமாலை (28.04.2009 - 22.05.2011), S.K. தேவராஜா (23.05.2011 - 30.06.2018) ஆகியோர் இயக்குனர்களாக பணிபுரிந்தனர். 2018 ஆடி மாதம் தொடக்கம் அருட்பணி. S. எமிலியானுஸ்பிள்ளை அடிகாளர் இவ் ஆணைக்குழுவின் இயக்குனராக பணியாற்றி வருகின்றார்.

### இளைஞர், திருவழிபாடு

1997 இலிருந்து இயங்கி வரும் இவ் ஆணைக்குழுவின் முதலாவது இயக்குனராக (1997 - 2004) அருட்பணி. L. ஞானாதிக்கம் அடிகளார் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து இயக்குனர்களாக அருட்பணி. A. ஞானப்பிரகாசம் (2004 - 2008), அருட்பணி. P. யேசுராஜா (21.01.2008 - 23.01.2011), அருட்பணி. S. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் (24.01.2011 - 24.06.2016), அருட்பணி. S. ஜெயபாலன் (24.06.2016 - 19.07.2018), அருட்பணி. S. லக்கோண்ஸ் பிகிறாடோ (09.07.2018 - 18.08.2019) ஆகியோர் பணியாற்றினர்.

மேலும் திருவழிபாட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப இயக்குனராக அருட்பணி. P. கிறிஸ்து நாயகம் அடிகளார் (19.08.2006 - 28.05.2011), பணியாற்றினார் அவரைத் தொடர்ந்து அருட்பணியாளர்களான S. அன்ரன் (29.05.2011 - 31.08.2013), அருட்பணி. A. ஆரோக்கியம் (01.09.2013 - 18.08.2019) ஆகியோர் பணியாற்றினர். இவ் ஆணைக் குழுக்களின் தற்போதைய இயக்குனராக அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் அடிகளார் பணிபுரிகின்றார்.







### திருப்பாலர் மறைபரப்பு சபை

இவ் மறைபரப்பு ஆணைக்குழுவானது ஆரம்ப காலங்களில் அருட்பணி. ஆ.சூசைப்பிள்ளை, அமரர் அருட்பணி. S.நோபேட் ஆகியோரால் வழிநடத்தப்பட்டு வந்தது. பின்னர் (1989 - 1995) அருட்பணி. T. நவரெட்ணம், (01.11.2003 - 31.12.2008) அமரர். அருட்பணி. S.V. அவிதப்பர், (31.01.2009 - 04.04.2010) அருட்பணி. S. டக்ளஸ் மில்ரன் லோகு, (04.04.2010 22.14.2011) அருட்பணி. X.F றெஜினோல்ட், (06.10.2013 - 30.06.2018) அருட்பணி. A. யூட் குரூஸ் ஆகியோர் தொடர்ந்து பணியாற்றினர் 26.07.2018ல் இருந்து இன்று வரை அருட்பணி S. சவுல்நாதன் இயக்குனராக பணியாற்றி வருகின்றார். இவ் ஆணைக்குழுவில் 125 திருப்பாலர் சபைகளும், 200 ஊக்குவிப்பாளர்களும், 4031 சிறார்களும் உள்ளடக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

### சமூகத் தொடர்பு

1987இல் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆணைக்குழுவின் இயக்குனர்களாக, அருட்பணி. P.N.ஞானசேகரம், அருட்பணி. N.F.கெனடி, அருட்பணி. X.F.றெஜினோல்ட், அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா, (1997.10.10 - 2006.12.05) அருட்பணி. அலெக்ஸாண்டர் சில்வா (06.12.2006 - 14.05.2011) அருட்பணி. P.கிறிஸ்து நேசரெட்ணம் (04.05.2011 - 28.06.2018) ஆகியோர் பணியாற்றினர். மேலும் மன்னா பத்திரிகையின் ஆசிரியர்களாக (1986 - 1992) அருட்பணி. A.பிலிப் IVD, (1993 - 1994) அருட்பணி. T.நவரெட்ணம், (1997 - 2000) அருட்பணி. C.அந்தோனிதாஸ் டலிமா, (10.01.2010 - 05.05.2011) அருட்பணி. S.டக்ளஸ் மில்ரன் லோகு (05.05.2000 09.01.2010, 06.05.2011 - 28.06.2018) அருட்பணி. P.கிறிஸ்து நேசரெட்ணம் ஆகியோர் பணியாற்றினர். 2018 ஆடி மாதம் தொடக்கம் சமூகத்தொடர்பு ஆணைக்குழு இயக்குனராகவும் மன்னா பத்திரிகை ஆசிரியராகவும் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி. சில்வா அடிகளார் பொறுப்பேற்று இவ் ஆணைக்குழுவிற்கான நிரந்தர நிலையத்தையும், அதனுள் மன்னார் கத்தோலிக்க அச்சகம், நூலகம், அருங்காட்சியகம் போன்றவற்றையும் உருவாக்கி தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

### வாழ்வுதயம்

1988.02.06 அன்று ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் வாழ்வுதயத்திற்கான கட்டிடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 07.08.2010இல் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. 1988ற்கு முன்னரே இவ் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது. அருட்பணியாளர்களான அமரர். J.B. தேவராஜா (22.01.1974 - 20.09.1981), அல்பன் இராஜசிங்கம் OMI (12.04.1985 - 31.08.1995) S. எமிலியானுஸ்பிள்ளை (01.09.1995 - 29.08.2001), P. யேசுராஜா (30.08.2001 - 19.08.2006), S.J. பெப்பி சோசை (19.08.2006 - 20.05.2011), M. ஜெயபாலன் (23.05.2011 - 11.07.2018) ஆகியோர் இயக்குனர்களாக தொடர்ந்து பணியாற்றினர். இவ் ஆணைக்குழுவின் தற்போதைய இயக்குனராக அருட்பணி. S. அன்ரன் அடிகாளர் பணியாற்றி வருகின்றார்.

### மடுமாதா சிறிய குருமடம்

சிறிய குருமடமானது மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஒரு சிறு வீட்டில் 07.01.1989 அன்று அருட்பணி. A. சேவியர் குரூஸ் அடிகளாரை அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 16.06.1996 இல் இதற்கான நிரந்தர இல்லமானது ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. மேலும் இதன் அடுத்தடுத்த அதிபர்களாக அருட்பணி. A. இராயப்பு (01.03.1995 - 30.09.2009), அருட்பணி. S.K. தேவராஜா (01.10.2001 - 19.08.2006), அருட்பணி. P. யேசுராஜா (21.08.2006 - 13.10.2007), அருட்பணி. A. சேவியர் குரூஸ் (21.10.2007 - 03.10.2014), அருட்பணி. A. ஞானப்பிரகாசம் (04.10.2014 - 28.06.2018) ஆகியோர் பணியாற்றினர். இவர்களைத் தொடர்ந்து தற்போது அருட்பணி. கிறிஸ்து நேசரெட்ணம் அடிகளார் அதிபராகவும், அருட்பணி. தேவராஜன் அடிகளார் துணை அதிபராகவும் பணியாற்றுகின்றனர். பல குருக்களை உருவாக்கிய இக்குருமடத்தில் தற்போது 56 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஆன்மீக இல்லம் - தோட்டவெளி

ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையால் 2006.09.09 அன்று ஆரம்பிக்கப்பட்ட இவ் இல்லத்தின் இயக்குனர்களாக அருட்பணி. A. யூட் குரூஸ் (11.04.2010 - 17.07.2016) அருட்பணி. S. கிறிஸ்ரியன் வாஸ் (17.07.2016 - 08.07.2018) ஆகியோர் பணியாற்றினர். மேலும் இதன் தற்போதைய இயக்குனராக அருட்பணி. D. அலெக்ஸாண்டர் சில்வா அடிகளார் பணியாற்றி வருகின்றார்.

### தியான இல்லம் - மடு

ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையால் தொடங்கப்பட்ட இவ் இல்லமானது கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. அருட்பணியாளர்களான A. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ (17.05.2012 - 16.06.2013), A. இராயப்பு (01.10.2014 - 08.07.2018), A. ஆரோக்கியம் (08.07.2018 - 18.08.2019), S. மில்ரன் தேவராஜா (24.08.1019 - 15.12.2020) ஆகியோர் இவ் இல்லத்தின் இயக்குனர்களாக பணியாற்றினர். தற்போதைய இயக்குனராக அருட்பணி. A.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளார் பணியாற்றுகின்றார்.

### இறையியல் கல்வியகம்

இக் கல்வியகமானது ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் 01.09.2018 அன்று அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளாரை இயக்குனராக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பொதுநிலையினரின் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தி அவர்களும் தேர்ச்சி பெற்று டிப்ளோமா, கலைமானி பட்டங்களை பெற இந்த கல்வியகம் மிகவும் உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைகள்

# நூற்றாண்டு விழாவில் தடம்பதிக்கும் இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபை – 05.02.2021

அருட்சகோ. எலிசபேத் அ.கா

**விசுவாச தீபம் அன்னை வெரோணிக்கா**

புரட்சிகள் பல பூத்து, மதப்புரட்சிகள் வேகமடைந்த காலம் அது. அவ்வேளையிலே தான் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையும் கிளர்ந்தொளிர்ந்தது. அவ்வாறு ஆரம்பமாகி பாரத மண்ணிலே அடியெடுத்து வைத்து நூற்றைம்பது நீண்ட நெடிய ஆண்டுகள் பயணித்து பட்டொளி வீசும் நிறைவினை நினைவுகூருகின்றனர் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர். சொல்லற்கரிய இந்த அபார சாதனைக்கு ஆதார சுருதியாக அடிநாதமானவர் இச்சபையை ஸ்தாபித்த அன்னை வெரோணிக்கா. மகிழ்கின்றோம், மனநிறைவு கொள்கின்றோம். மனதார இறைவனைத் துதிக்கின்றோம்.

**அழைத்தலின் நாற்றுமேடை குடும்பம்**

ஒரு அன்பான, அழகான நடுத்தர, நல்ல குடும்பம். ஆங்கிலேய போர்ப்படைகளின் மதகுரு கென்றி டானியேல் இல்லத்தலைவன். படைக்குடும்பத்தைச் சேர்ந்த மறீனா தலைவி. இரு உள்ளங்களின் இணைப்பின் அணிகலன்களாக கென்றி, சோவ்வி, மேரி ஆன், எமிலி, கத்தறீன் எனும் குழந்தைச் செல்வங்கள். 1823 ஜனவரி முதலாம் நாள் சோபி அதிசயக் குழந்தையாக அவதரிக்கின்றார். பார்க்கும்போது பல்கலைக்கழகம் என்பதற்கொப்ப இக்குடும்பம் பற்பல கலைகளின் கவிநிலமாக விளங்கியது. அத்துடன் விசுவாசத்தில் ஊட்டம் பெற்ற உன்னத வாழிடமாக மிளிர்ந்தது. தினமும் விவிலிய வாசகம், விளக்கம், தனிப்பட்ட, குடும்ப செபம் என்பன வாழ்க்கைக்கு வலுவானது. கதவுத்திறப்புத் துவாரத்தினூடாக தந்தையானவர் முழந்தாளிட்டு செபிப்பதைக் கண்டு செபத்தில் உள்ள ஆர்வம் பசுமரத்தாணியாகப் பதிந்தது. விளையும் பயிர் முளையிலேயே பளிச்சிட்டது. மேலைத்தேய சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்ததால் தினமும் குடும்பமே பாடி மகிழ்ந்ததாக கூறப்படுகின்றது. அர்ப்பணத்தின் அழகு மகிழ்ச்சிதானே.

**இறை மனித திட்டம்**

இறைவனின் திட்டம் தனித்துவமானது. பிரமிக்கத்தக்கது. சோபி இறைவனால் ஆட்கொள்ளப்படுகின்றார். இறை ஆசீர் மிகுந்தவராக சிறு வயதிலிருந்தே வழி நடத்தப்படுகின்றார். குயவன் கையில் களி மண்ணைப்போல, வல்ல தேவன் அவர் வாழ்வை வடிவமைக்கின்றார். தங்கள் பணியின் காரணமாக அடிக்கடி பயணங்கள் செய்வது சர்வ சாதாரணமாக அமைந்தது. அத்தகையதொரு பயணத்தில் தந்தையார் இறை பதம் எய்துகின்றார். இழப்பின் வேதனையையும் அனுபவிக்கின்றார். இப்பயணங்கள் அனுபவங்கள் பலவற்றை அள்ளி வழங்கியது. இயற்கையை இனிதே ரசித்து, இறைவனை அனுபவித்த சோபியும் தன் குடும்பத்தைக் கோயிலாகக் கொண்டிருந்தார்.

**தேடலில் திருப்பம்**

அழகு, அறிவு, ஆற்றல், திறமை, தியாகம், பிறரன்பு ஆகிய நற்குணங்களை நிறைவாகக் கொண்டிருந்தும் உள்ளத்தில் ஒரு வெறுமையை வெற்றிடத்தை அவரால் உணர முடிந்தது. ஆண்டவர் குரல் கேட்கின்றது. உயிர்ப்பு விழாவின் இரண்டாம் தினம் ''சமாதானத்தை உனக்கு அளிக்கின்றேன்''. தன்னை அறியாத தாகம், இறை ஏக்கம் அவரை ஆக்கிரமித்தது. உள்ளார்ந்த சக்தியால் உந்தப்பட்டு திக்கெட்டும் தேடினார். ஓடினார் வாழ்க்கையின் ஓரங்களுக்கு ஓடினார். ஆலயங்களுக்கு சென்று இறைவனுடன் அமைதியிலே ஆழ்ந்திருந்தார். அமைதியில் மகிழ்ந்திருந்தார். நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தில் இன்பம் கண்டார். எதிலுமே கிடைக்காத ஆன்ம சாந்தியை ஆத்மார்த்தமாக சுகிர்த்துணர்கின்றார். எப்போதும் உடனிருக்கும் அவரது சகோதரி மேரிஆனும் கத்தோலிக்க அவையில் திருமுழுக்குப் பெற ஆயத்தமாகின்றனர். பாசப் பிணைப்புகளை உடைக்கும்



பலத்த எதிர்ப்புகளை வென்று பிற்காலத்தில் இருவருமே துறவிகளாகின்றனர். இதற்கிடையே பேரழகுப் பெட்டகமான சோபிக்கு ஈடான பொருத்தமான படைத்தளபதி ஒருவருக்கு மண ஒப்பந்தம் செய்யப்படுகின்றது. தனது அன்பின் மேன்மையான அர்ப்பணத்திற்காய், மிகவும் சாதுரியமாக மிருதுவாக அதனை விலக்கிவிட்டு தெய்வீக அழைப்பிற்குத் தன்னை அர்ப்பணிக்கின்றார்.

**இறைத் திருவிளையாடல்**

இவர் வாழ்வில் இப்படியொரு திருவிளையாட்டு. சகோதரன் கென்றி திடீரென நோய்வாய்ப்பட்டதனால் அன்னையின் கவனிப்பு தேவைப்படுகின்றது. இளம் யுவதிகளான தனது பிள்ளைகளைத் தனியே விடமுடியாத காரணத்தால் புனித வளனார் காட்சி இல்லத்தில் தங்க வைக்க விரும்புகின்றார் சோபியின் தாயார். அருமையான வாய்ப்பினைக் கொடையாகப் பெற்றதால் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றனர். இங்கு நவ சந்நியாச வாழ்வை ஆரம்பித்து திருச்சிலுவைத் திருவிழா அன்று துறவற வாக்குத்தத்தையும் செய்து வெரோணிக்கா எனும் திரு நாமத்தைச்சூடிக் கொள்கின்றார்.

மேவிப் பாய்ந்த பக்திப்பிரவாகம்

" உன்னைக் கார்மேலிற்கு அழைக்கிறேன்." எனும் குரல் உள்ளத்தின் ஆழத்தே ஒலிக்கக் கேட்கிறார். அவரது பக்தி வேட்கை பிரவாகமாக மேவிப் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. கீழைத்தேய நாடுகளுக்கு செல்ல வேண்டும். அங்குள்ள இளம் யுவதிகளுக்கு கல்வி புகட்ட வேண்டும். எல்லோருக்கும் கல்விப் பணியாற்ற வேண்டும். இறையரசை இதர பணிகள் செய்து பரப்ப வேண்டும் எனும் தூர நோக்குகளால் தூண்டப் பெறுகின்றார்.

முதற் கட்டமாக பிரான்ஸில் பயோன் எனும் இடத்தில் இளம் துறவிகளைப் பயிற்றுவிக்கின்றார். இறை கரம் இவரைத் தாங்கியதால் இன்னல்கள் பல எதிர் கொண்ட போதும் தம் பணியில் நிறைவு காண்கிறார். இறைவனும் இவரது பாதையிலே பலரைக் கருவிகளாகப் பயன்படுத்துகின்றார். அவர்களில் ஒருவராக மேதகு ஆயர் மாறி ஈவ்ரம் உற்ற துணையாளராகின்றார்.

**எதிர் நீச்சல்**

நீண்ட கடற் பயணம், நிரந்தரமற்ற நிலைப்பாடு, ஆரோக்கியமற்ற காலநிலை, ஒவ்வாத உடல் நிலை போன்ற பல வாதைகளை எதிர் கொண்டதால் உயிரிழப்புகள் வேதனையைத் தந்தாலும் கலப்பையில் கை வைத்தவன் முன் வைத்த காலைப் பின் வைக்கலாகாது எனும் எண்ணத்தினராய் சென்றார்கள். அவர் தம் நிழலினிலே சென்றார்கள். பாரத மண்ணிலே பல மொழி தவழும் பைந்தமிழ் நாட்டிலே கலிகட்டில் கால் பதித்து வரலாற்றில் இடம் பிடித்தாயிற்று. நிலத்தை முத்தமிட்டு நேர்த்தியாக சிரம் தாழ்த்திப் பணிகின்றார்கள். என்னே இறைவனின் வல்லமை!

**கனவு நனவாகிய காவியம்**

கல்விப்பணிக்கு கால்கோலிட்டு கடமைமையை சிரமேற் கொள்கின்றனர். கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவின் முதற் கல்லூரி மங்களூர் புனித ஆனாள் கல்லூரி. அசுர வேகத்தில் பாடசலைகள் இயங்கத் தொடங்கின. ஆண்டவன் அருளினால் விஸ்தரிக்கப்பட்ட பணியானது இந்தியாவைத் தாண்டி இலங்கை, பாகிஸ்தான், குவைற், பா.ஃறேன், கென்யா ஆகிய இடங்களை மேவிய விதம் வியப்பானது. காவியமாகின்றது. வாழ்த்துகின்றோம். எம்மை உருவாக்கி வடிவம் கொடுத்த விசுவாச தீபத்திற்குத் தலை சாய்க்கின்றோம். ஏற்றிய தீபம் என்றும் இலங்கிட வாழும் 2500 பேரும் இணைந்து புகழ்கீதம் பாடுகின்றோம்.

விசுவாசத்தின் தீபமே வேதத்தின் வெண்புறாவே! விண்வாழ்வை நோக்கிய விடி வெள்ளியே! வீரத்தாய் வெரோணிக்காவே! உன் சுவாசம் விசுவாசம் உன் அன்பு பேரன்பு! எம் வாழ்வின உயிரானதே! பணிவுந்தன் அணியாக துணிவுந்தன் தூணாக! பாவையரெம் உணர்வானதே! கனவுகள் பல கண்டாய் கார்மேலின் முதல்வியே! கண்ணோக்கிப் பாருமம்மா! இயேசுவையே நாம் தேட வேண்டும்! இயேசுவையே நாம் வாழ வேண்டும்! இயேசுவிலே நாம் மூழ்க வேண்டுமே – தாயே! உம் வழியில் செல்ல வேண்டுமே! இறைவனே போதுமென்று இதயத்தில் அமைதி கொண்டாய்! இனியவளே எம் தாயே! செபத்திலே நிலைத்திருந்து சேவையிலே மகிழ்ந்திருந்து! சிறியவளாய் வாழ்ந்தாயம்மா! உன் பணியைத் தொடர்ந்திடவே உலகமெல்லாம் மகிழ்ந்திடவே! கரம் பற்றி நடத்துமம்மா! ●

---

## - அருட்திரு.பி.ஏ.தோமஸ் அமதி அடிகளாரின் வாழ்வும் பணியும் -

# தோமஸ் அடிகளார் தோலகட்டி சந்நியாசி

**ஒரு உண்மைத் தந்தை**

நரிகளுக்குப் பதுங்கு குழிகளும் வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு மானிட மகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. (மத் 8 : 20) என இயேசு கூறினார். இறையடியானாகிய அருட்திரு. தோமஸ் அடிகளாருக்கு தலைசாய்க்க இடமிருந்தது. ஆனால் படுத்து ஓய்வெடுக்க நேரம் கிடைப்பதுதான் அரிதாய் இருந்தது. அவர் எப்போது படுக்கச் செல்கிறார் என்பது அவர் மேசையில் இருந்து மின்னிக் கொண்டிருக்கும் மண்ணெண்ணை விளக்குக்குத் தான் தெரியும். அடுத்த நாளுக்கான பாடங்களை மிகவும் அக்கறையுடன் ஆயத்தம் செய்வார். அவர் தன் தனிச் செபத்திற்கு பிரமாணிக்கமாய் இருப்பார். இயல்பு கடந்த அவரது கண்ணோட்டத்தை இறைவன் ஆசீர்வதித்தார். விடுதியில் ஓர் இரவு இந்த நிகழ்வு இடம்பெற்றது. அருட்தந்தை தோமஸ் அடிகள் தன் வழக்கமான நாளாந்தப் பணிகளை எல்லாம் அப்போதுதான் முடித்திருந்தார். ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் மாணவர்களின் குறட்டைச் சத்தம் கேட்டது. அவர் படுக்கை அறையை சுற்றி வந்தார். ஓர் இந்து மாணவன் வேதனை தாங்காது படுக்கையில் புரண்டு முனங்கிக் கொண்டிருந்தான். அவன் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தான். அவர் மெதுவாக அவனருகில் சென்று அவனது நெற்றியைத் தொட்டு நித்திய மருத்துவரே குணமளியும் என்று இரந்து செபித்தார். சில நிமிடங்களின் பின் பையன் உறங்கி விட்டான். அவன் ஆழமாக உறங்குகிறான் எனக் கண்ட அடிகளார் அவனை விட்டுச் சென்றார். சில நாட்களாக அவனை வேதனைப்படுத்திக்

செபமாலைக் கன்னியர் மடம்,
பட்டித்தோட்டம்

கொண்டிருந்த காய்ச்சல் ஒருபோதும் வராதவாறு அவனை விட்டு நீங்கியது. மறு நாள் புதுப்பிக்கப்பட்ட சக்தியுடன் எழுந்த மாணவன் தனக்கு என்ன நடந்தது என்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டான். எமது தந்தை ஒரு சாதாரண மனிதரல்ல அவர் உண்மையில் ஒரு புனிதர் என சுகம் பெற்ற மாணவன் கூறினான். ஒவ்வொருவர் மட்டிலும் தனிப்பட்ட கரிசனை காட்டுவது இவரிடம் காணப்பட்ட சிறப்பு அம்சம் என்பது விடுதி மாணவர்களது கருத்தாகும். தந்தை உணவறைக்கு வந்து விரைவில் போய்விடுவார். அடிக்கடி அவர் தன் கைகளை உடைக்குள் மறைத்துக் கொண்டு வந்து பலவீனமானவர்களுக்கு சத்துணவு கொடுப்பார். அனைவரும் சந்தேகமின்றி இவரை உண்மையான தந்தை என்றும், இனிய தாயென்றும் கருதினார்கள். அருட்தந்தை அவர்கள் விடுதியில் தான் தங்கும் பகுதியில் மருந்துகளடங்கிய ஓர் அலுமாரி வைத்திருந்தார். பையன்களில் யாராவது நோயுற்றால் மருத்துவமனைக்கு அனுப்பு முன் தானே அவர்களைக் கவனிப்பார். அடிக்கடி மருந்து கொடுத்து குணமாக்குவார். அனைத்துக்கும் மேலாக அன்பு ஆட்சி செலுத்த வேண்டும் என்ற நோக்கம் கொண்ட இறைவனுக்கு இவருடைய வாழ்க்கை மிகவும் பிரியமானதாய் இருந்தது. நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன் (1 கொரி 13 : 1) மலைகள் இருப்பது அவற்றுக்காக அல்ல மரங்கள் தம் நிழலையும், கனியையும் பிறருக்குக் கொடுக்கின்றன. தாம் அதை உண்பதில்லை ஆறுகளும், அருவிகளும் ஓடுவது பிறருக்காக. ஓடும் இடமெல்லாம் உயிரினங்களை வாழ்விக்கின்றன. அதே போல் தந்தை தோமஸ் அடிகளாருடைய அன்பு அவருக்கென்று இல்லாது மற்றவர்களை மற்றவர்களை நோக்கியே பாய்ந்து ஓடியது.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள்

# வெளிச்சம்

**நம்பிக்கையும் தூய ஆவியானவரின் அருட்பொழிவும், இயக்கமும்**

கிறிஸ்தவ வாழ்வு என்பது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவிலும் அவரைச் சார்ந்தவற்றிலும் நாம் கொள்கின்ற ஆழமான நம்பிக்கையும் அவருடைய தூய ஆவியானவரின் அருட்பொழிவாலும் நாம் நிரப்பப்பெற்று வாழ்கின்ற மற்றும் அர்ப்பணித்துப் பணி செய்கின்ற ஒரு வாழ்க்கை முறை என்று கூறினால் அது மிகப் பொருத்தமாக அமையும். அன்பிய வாழ்வைப்பற்றி நாம் அதிகம் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் ஆதிக்கிறிஸ்தவர்களின் சாயலை நாமும் பெற்று வாழவேண்டுமென்றால் இயேசுவிலும் அவரைச் சார்ந்த வற்றிலும் ஆழமான நம்பிக்கையும் தூய ஆவியானவரின் அருட்பொழிவில் நிறைவும், இயக்கமும் நமக்கு இன்றியமையாத தேவையாகும்.

**திருத்தூதர்களும் ஆதிக் கிறிஸ்தவர்களும்**

திருத்தூதர்களினதும் ஆதிக்கிறிஸ்தவர்களினதும் வாழ்வை நாம் தியானித்து நோக்குகையில் அவர்களுடைய வாழ்வும் பணியும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பிற்கு பின்னர் யூதருக்கு பயந்து அஞ்சி நடுங்கி ஒழிந்திருந்த திருத்தூதர்கள் பெந்தக்கோஸ்தே தினத்திலே தூய ஆவியானவரின் அருட்பொழிவை பெற்ற போது தாம் கொண்டிருந்த நம்பிக்கைக்கு துணிவுடன் சான்று பகர்ந்தார்கள். திருத்தூதர்கள் தமது நாட்டை, மொழியை, உறவுகளை துறந்து எட்டுத்திக்கும் சென்று உத்வேகத்துடன் இயேசுவுக்கு சாட்சிபகர்ந்தனர். இயேசுவிலும் அவரைச் சார்ந்த வற்றிலும் கொண்ட நம்பிக்கைக்காக துன்ப துயரங்களை அனுபவிப்பதிலும் மகிழ்ச்சியடைந்தார்கள். (தி. பணி 5:41) ஏன்? அவருக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்து வேதவித்துக்களாக மடிவது தமக்கு கிடைத்த பேறுடமையாக கருதினார்கள். ஆதிக்கிறிஸ்தவர்கள் திருத்தூதர்கள் வழியாக நம்பிக்கையை பெற்றதோடு தூய ஆவியானவராலும் நிரப்பப் பெற்றிருந்தார்கள். (தி.பணி 2:32,33) தூய ஆவியானவரின் அருட்பொழிவைப் பெற்ற அவர்களின் வாழ்க்கை முறை இவ்வுலக மக்களின் வாழ்க்கை நெறிகளில் இருந்து வேறுபட்டதாக இருந்தது. திருத்தூதர்கள் கற்பித்தவற்றிற்கு ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் செவிசாய்த்தனர். தமக்கிடையே நட்புறவில் நாளுக்கு நாள் வளர்ந்தனர். மற்றும் அப்பம் பிட்பதிலும் (நற்கருணை விருந்து) இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். நம்பிக்கை கொண்டவர்கள் ஒரே மனத்தவராய் ஒன்றாயிருந்ததோடு எல்லா உடமை களையும் பிறருடன் சிறப்பாக தேவையில் உள்ளவர்களுடன்

அருட்பணி M.A ஜெயசீலன்

பகிர்ந்து கொண்டனர். எளிய உள்ளம் படைத்தவர்களாய் வாழ்ந்து கடவுளைப் போற்றி வந்தார்கள் (தி.பணி 2:42-47) நீங்கள் ஒருவர் ஒருவருக்கு காட்டும் அன்பில் இருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை உலகம் அறிந்து கொள்ளும் என்ற இயேசுவின் வார்த்தைகள் அங்கே வாழ்வால் நிரூபிக்கப் பட்டது. அதனால் அவர்கள் எல்லா மக்களுடைய நல்ல எண்ணத்தையும் பெற்றிருந்தார்கள். நம்பிக்கையாளர்களின் தொகையும் நாள்தோறும் அதிகரித்தது (தி.பணி 2:47).

**நம் கிறிஸ்தவ வாழ்வு**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் நமது கிறிஸ்தவ நம்பிக்கையும் நாம் பெற்றிருக்கும் தூய ஆவியானவரின் அருட்பொழிவும் எத்தகைய தாக்கத்தை, பயனை எம்மிலும் மற்றவர்களிலும், சமூகத்திலும் உருவாக்குகின்றது என்ற கேள்வி எழுகின்றது. நற்பயனை, விளைவை தருகின்றது என்றால் நாம் நிச்சயம் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். ஆனால் பொதுவாக நோக்குகையில் இன்று நமது வாழ்வில் நாம் கொண்டுள்ள கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் வாழ்வுக்கும் ஆதிக்கிறிஸ்தவ வாழ்க்கை முறையோடு ஒருமித்து நோக்கும் பொழுது பாரிய இடைவெளியை உணரமுடிகின்றது. இவ் விடைவெளி நமது நம்பிக்கைக்கும் தூய ஆவியானவர் நம்மில் செயற்பட நாம் எம்மை விட்டுக்கொடுத்த எங்கள் அர்ப்பணத்துக்கும் இடையேயான இடைவெளியா? என நம்மை கேட்கத் தூண்டுகின்றது.

**நமது சிந்தனைக்கு**

கொள்கையளவில் நாம் நல்ல கிறிஸ்தவர்களாக இருந்தாலும் தூய ஆவியானவரின் இயக்கம் இல்லாத செயலற்ற நம்பிக்கையாளர்களாக சிலவேளைகளில் நடைமுறையில் கடவுளை மறுக்கின்றவர்கள் போன்று வாழ்கின்றோமா? என சிந்திக்க வைக்கின்றது. புனித யாகப்பர் குறிப்பிடுவது போல உயிரற்ற நம்பிக்கை உடையவர்களாக நாம் வாழ முற்படுகின்றோமா? என நம்மை கேட்கத் தோன்றுகின்றது (யாக்கோப்பு 2:17) புனித யோவான் "உலகை வெல்வது நம் நம்பிக்கை" என்று குறிப்பிடுகின்ற போதிலும் (1யோவான் 5:4) உலகத்தையும், அதன் தீமைகளையும், மாய கவர்ச்சிகளையும் ஏன் பல சந்தர்ப்பங்களில் நம்மால் வெல்ல முடியாது இருக்கின்றது என்று சிந்திக்க நம்மை தூண்டுகின்றது. இன்று நமது கிறிஸ்தவ சமூகங்களில் சுயநலம், பேராசை, சுரண்டல், வஞ்சிப்பு, பகைமை, பிரிவினை இன்னும் பல ஊனியல்பின் செயல்கள் மலிந்து காணப்படுகின்றது. பில்லிசூனியம், பேய் காரியங்கள், சாஸ்திரங்களைப் பின்பற்றல் போன்றவை நம் சமூகங்களில் சர்வ சாதாரணமாக உள்ளது. நடைமுறையில் இவையாவும் இறைவனையும் அவரது ஆற்றலையும், அன்பையும், தூய்மையையும் மறுதலிக்கின்ற சந்தர்ப்பங்கள் அல்லவா?

**முடிவுரை**

எனவே நம் கிறிஸ்தவ வாழ்வில் நாம் கிறிஸ்துவை அரவணைக்க நம்பிக்கையும் தூய ஆவியானவரின் அருட்பொழிவும், இயக்கமும் இறைவன் நமக்குத் தரும் இருகரங்கள் என உணர்ந்து கொள்வோம். நாம் பெற்றுள்ள நம் நம்பிக்கை நம்மில் பயனளிக்க தூய ஆவியானவரின் அருட்பொழிவை நாளும் கேட்டு செபிப்போம். கிறிஸ்து இயேசுவில் நம் கண்களை பதிய வைத்து இறையரசு இவ்வுலகில் மலரச்செய்யும் இறைவனின் கருவியாக திகழ்வோம்.

நம்பிக்கையால் நீங்கள் படைக்கும் பலியில் நான் என் இரக்கத்தையே பலிப்பொருளாக வார்க்கவேண்டியிருப்பினும் அது எனக்கு மகிழ்ச்சியே (பிலிப்பியர் 2:17) ●

# இயேசுவைப் பின்பற்றிய செப வாழ்வு

யேசுதாசன் பாமினி குரூஸ்
பெரிய கமம், மன்னார்

நான் கனிவுடன் மனத்தாழ்மையும் உள்ளவன். ஆகவே என் நுகத்தை ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் "என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது" (மத்தேயு 11:29.) மேற்படி வார்த்தைகள் மூலமாக நம் தேவனாகிய ஆண்டவர் தமது வாழ்வைப் பின்பற்ற நமக்கு அழைப்பு விடுக்கின்றார். அவர் தனது வாழ்வு மூலமாக ஒரு மனிதன் பிறப்பதில் இருந்து இறப்பு வரை எப்படி வாழ வேண்டும் என்பதை திருவிவிலியத்தில் பலநூறு இடங்களில் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார். ஆனாலும் அவருடைய வார்த்தைகளை வாசித்துப் பார்ப்பதுமில்லை, கடைப்பிடிப்பதுமில்லை அந்த வார்த்தைகளை அறிந்துகொள்ள சிறிதளவு கூட முயற்சி செய்வதும் இல்லை. இந்த உலகத்தின் அழிந்து போகின்ற செல்வங்களுக்கும், புகழ்ச்சிகளுக்கும் நம்மை அர்ப்பணித்து வாழ்கின்றோம். ஆனால் நமக்கொரு துன்பம் வரும் பொழுது மாத்திரம் கடவுளுக்குக் கண் இல்லையா? அவர் என்னை ஏன் கைவிட்டார். நான் ஒவ்வொரு நாளும் திருப்பலிக்கு போகின்றேன், செபம் சொல்கின்றேன் என்று கடவுள் மீது பழியைப் போட்டு எமது பாவத்தைக் கட்டிக் கொள்கின்றோம். இது என்ன நியாயம்.

நமது வீட்டிலே ஒரு மலர்ச்செடியை நடுகின்றோம். அதனை வளர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் நீரூற்றி தேவையான பொழுதெல்லாம் உரம் போட்டு பார்த்துப் பார்த்து வளர்க்கின்றோம். ஏன் என்றால் அது வளர்ந்து எமது கண்களையும், வீட்டையும் அழகுபடுத்தும் பூக்கள் தரும் என்ற நம்பிக்கையும் ஆர்வமும். ஆனாலும் நமது விசுவாச வாழ்க்கைக்கு நாம் இந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோமா சிந்திப்போம் இந்த உலக இன்பத்தை தருகின்ற ஒரு மலர்ச் செடிக்கு இத்தனை முக்கியத்துவத்தை கொடுக்கும் நாம் நித்திய ஜீவனைத் தருகின்ற அவருடைய உயிருள்ள வார்த்தைகளை நாம் எப்படி எல்லாம் பாதுகாக்க வேண்டும், அதனை வாசித்து அதன் அர்த்தங்களை உணர்ந்து எமது வாழ்வை மாற்றிக் கொள்ள முயல வேண்டும், செபிக்கவேண்டும். செபிக்கின்றோமா சிந்திப்போம்.

நமக்கு ஒரு காரியம் நடக்க வேண்டு மென்றால் கடவுளுக்கு நாட்குறிக்கின்றோம். இத்தனை நாட்களுக்குள் இந்தக் காரியம் நடந்தால் மெழுகுதிரி கொழுத்துவேன், உபவாசம் இருப்பேன், முழந்தாளில் நடப்பேன் இப்படி பலவற்றை கூறுகின்றோம். குறித்த காரியம் நிறைவேறாவிட்டால் மனமுடைந்து வேறு வழிகளை நோக்கி திரும்பி



ஓடிவிடுகின்றோம். இதனால் தான் "இந்த உலகத்தில் இருப்பவனை விட உனக்குள் இருப்பவர் பெரியவர்" என்ற இறை வார்த்தைக்கு அர்த்தமில்லாமல் போகின்றது.

சாதாரண பூச்செடிக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை எமது விசுவாச வாழ்வில் கொடுக்கும் பொழுது அது நமக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை ஒன்றுமில்லாமையில் இருந்து இந்த உலகத்தை உருவாக்கி நமக்கு உயிர் மூச்சை தந்த நம் தேவனை நாம் வாழ வேண்டும் என்று எல்லா நலன்களாலும் நம்மை நிறைத்து பராமரித்து வருபவரை நாம் எப்படியெல்லாம் உயர்த்த வேண்டும், சிந்திப்போம். அவருடைய ஆசீர்வாதங்களையும் நாம் சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமென்றால் நம் தேவனிடம் நம்பிக்கை விசுவாசம் செபவாழ்வு பலதரப் பட்டதாக இருக்க வேண்டும் அப்படி நாம் முழுமையாக அர்ப்பணித்து செபிக்கும் பொழுது "அன்னாவின் மன்றாட்டிற்கு செவிசாய்த்து சாமுவேலைக் கொடுத்த தேவன்" (1சாமுவேல் 1-19-21)", "மீனின் வயிற்றில் இருந்து யோனாவை வெளியில் கொண்டு வந்தார் (யோனா 2:1-10)" "ஆபிரகாமுக்கு நூறு வயதில் ஈசாக்கை கொடுத்தவர் (தொ.நூ 21:1-5)" நமக்கும் பதிலளிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை எனவே நம்முடைய செபம் எப்படி இருக்க வேண்டும் என்பதை தாமே தனது செப வாழ்வின் மூலம் கற்றுத் தந்த நம் இயேசுவின் வழிகளை பின்பற்றி செபிக்க முயற்சி செய்வோம், அதற்காக அவருடைய செபவழிகளை நோக்குவோம்.

முழந்தாள் படியிட்டு செபித்தார் (லூக்கா 22-41), முகம் குப்புற விழுந்து செபித்தார் (மத்தேயு 26-39), மண் தரையில் விழுந்து தன்னைத் தாழ்த்தி செபித்தார் (மாற்கு 14-35), கண்ணீர் சிந்தி செபித்தார் (எபிரேயர் 5:7), வியர்வை சிந்தி செபித்தார் (லூக்கா 22:44), பலத்த சத்தத்தோடு செபித்தார் (எபிரேயர் 5:7), வியாகுலத்தோடு செபித்தார் (லூக்கா 22:44), ஊக்கத்தோடு செபித்தார் (லூக்கா 22:44), தேவ சித்தத்தின் படி அர்ப்பணித்து செபித்தார் (லூக்கா 22:42), விடியற் காலையில் கருக்கல்லில் எழுந்து செபித்தார் (மாற்கு 1:35).

நம்முடைய செபம் எப்படிப்பட்டது என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கும் தருணம் இது மேற்குறிப்பிட்ட வழி முறைகளில் ஒரு அம்சமாவது எமது செபத்தில் உள்ளதா? சிந்திப்போம். புதிய கண்டுபிடிப்புக்கள் புதிய நாகரீகங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு அதனதன் போக்கில் வாழ முயற்சிப்போம். நாம் புதிய ஆண்டிலே தடம் பதித்துள்ளோம் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளை எமது செப வாழ்வில் கடைப்பிடித்து எமது விசுவாசத்தை பெருக்கி எமது வாழ்வை முன்னெடுத்துச் செல்வோம் அப்படி எங்களை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்து வாழும்பொழுது எல்லா விதமான ஆசீர்வாதங் களும் நலன்களும் எமது வாழ்வை நிறைவாக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்று விசுவசிப்போம் வாழுவோம் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய சாரளம்

## பாம்புக்கடியும் அதற்கான முதலுதவியும்

திரு.ச.தேவசகாயம், நியூயோர்க் USA.

இயற்கையின் படைப்பில் பாம்புகளுக்கு விஷம் தரப்பட்டிருப்பது மனிதனைக் கொல்வதற்கல்ல மாறாக பாம்பு தனது இரையான தவளை போன்ற உயிரினங்களின் மூச்சை அடையச் செய்ய. அதேவேளை தனது எதிரிகளான கீரி, கழுகு, மயில் போன்ற வற்றிலிருந்து தம்மை காத்துக்கொள்ள அதைப் பயன்படுத்தும். எந்தப்பாம்பும் திரைப்படங்களில் காட்டுவது போன்று வீடு தேடிவந்து பழிதீர்ப்பதில்லை. மாறாக அதன் பாதையில் நாம் குறிக்கிட்டாலோ அல்லது அதன் மீது நமது கால் அல்லது கை பட்டாலோ அவை நம்மை தீண்டுகின்றன. இந்த விஷக்கடிக்கு சரியான சிகிச்சையினை உரிய நேரத்தில் செய்தால் மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும். இலங்கையில் பாம்புக்கடியினால் வருடம்தோறும் அதிகளவான மக்கள் பாதிக் கப்படுகிறார்கள். மக்களுக்குப் போதிய விழிப்புணர்வையும், அடிப்படை முதலுதவி அறிவினையும் வழங்கும் போது தேவை அற்ற மரணங்களையும், உபாதைகளையும் தவிர்க்கமுடியும். பாம்பு கடிக்கும் போது விரைவாக வைத்தியசாலைக்கு செல்வதன் மூலம் அவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும். தேவையற்ற அல்லது தவறான முதலுதவிகளைச் செய்யும் போது தேவையற்ற உயிர் ஆபத்துக்கள் ஏற்படலாம்.

**பாம்புக்கடிக்கு உட்பட்டவரில் பின்வரும் அறிகுறிகளை அவதானிக்கலாம்:**

- பாம்பு கடித்த இடத்தில் பாம்பின் பற்கள் பட்டதற்கான இரண்டு துவாரங்கள் காணப்படும்.
- கடிபட்ட இடத்தில் அதிக வலி காணப்படும்.
- கடிபட்ட இடத்தினைச் சுற்றி நிறமாற்றமும், வீக்கமும காணப்படும்.
- ஓங்காளம் அல்லது வாந்தி எடுத்தல்
- வேகமான சுவாசம் ஏற்பட்டு பின்னர் சுவாசம் தடைப்படும்.
- மங்கலான பார்வை ஏற்படும்.
- உமிழ்நீர் வடியத்தொடங்கும், அத்துடன் வியர்க்கும்

**பாம்புக்கடிக்குள்ளானவருக்கு பின்வரும் முதலுதவி முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.**

1) பாம்புக்கடிக்குள்ளானவரின் பயத்தைப் போக்கக்கூடியவாறு ஆறுதல் வார்த்தைகளைக் கூறுதல் அவசியமாகும். பாம்பு கடித்த பின்னர் பொதுவாக யாராக இருந்தாலும் தனக்கு மரணம் ஏற்பட்டு விடுமோ என்ற பயமேற்படுவது இயல்பானதே. எனவே அவருக்கு நம்பிக்கையூட்டக்கூடிய முறையில் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்ததல் வேண்டும். அநேகமான பாம்புகள் வி'ம் உள்ளவைகள் அல்ல. தீண்டிய பாம்புகள் விஷமுள்ளதாக இருந்தாலும் அது விஷத்தை உட்செலுத்தாமல் இருக்க முடியும். பல அடையாளங்கள் இருந்தாலும் விஷம் உடலில் புகுந்துவிட்டது என கருதலாகாது. அவ்வாறு விஷம் உட்புகுந்தாலும் வைத்திய சாலைகளில் நற் பலனளிக்கக் கூடிய சிகிச்சை முறைகள் உண்டு. இச்சிகிச்சைகள் பூரண குணத்தை தரவல்லது போன்ற வார்த்தைகளைக் கூறி நோயாளியின் பயத்தைப் போக்குதல் மிகவும் முக்கியமானதாகும்.

2) நோயாளியை தரையில் படுக்கவைத்து காயப்பட்ட பகுதியை இதய மட்டத்தைவிட தாழ்த்தி வைத்தல் வேண்டும்.

3) பாம்பு தீண்டிய இடத்தை அசைக்காமல் வைத்திருப்பது மிகவும் அவசியம். ஏனெனில் தீண்டப்பட்ட உறுப்பு அசைந்தால் விஷம் உடலினுள் மிக விரைவாக அகத்துறிஞ்சப்படும் எனவே தீண்டப்பட்டவரை அசையாது வைத்திருக்க வேண்டும். உறுப்பை அசையாது வைத்திருக்க நோ்யாளியை பலகை ஒன்றில் வைத்து துாக்கிச் செல்வதே சிறந்தது. கடிபட்ட உறுப்பை ஒரு பலகை அல்லது அவரது கை அல்லது கால் ஆயின் மற்றய கை அல்லது காலுடன் சேர்த்துக் கட்டி அசையாது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

4) கடிபட்ட இடத்தில் தோலின்மேலிருக்கும் வி'த்தை அகற்ற அவ்விடத்தை சவர்காரம் நீரைப் பாவித்து மெதுவாகக் கழுவ வேண்டும்.

5) பாம்பு தீண்டிய பின்னர் தீண்டப்பட்ட உறுப்பு வீங்குவது ஒரு பொதுவான விடயமாகும். அப்படி தீண்டப்பட்ட இடத்தில் ஏதாவது ஆபரணங்கள்இ இறுக்கமான ஆடைகள் காணப்படின் அதனை அகற்றவும்.

6) வலியைக் குறைக்க பரசிற்றமோல் பாவிக்கலாம். ஆனால் அஸ்பிறின் பாவித்தல் கூடாது. ஏனெனில் அஸ்பிறின் இரத்தக்கசிவை அதிகரிக்கும்.

7) சுவாசம் தடைப்படுமாயின் வெளிமார்பு அமுக்கமும் உயிர்ச்சுவாசம் வழங்கவும். (இதனை பயிற்சிபெற்ற ஒருவரால் மட்டுமே செய்ய முடியும்)

8) விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.

முடியுமாயின் கடித்த பாம்பின் பெயர் தெரிந்தால் அதனை வைத்தியருக்கு தெரியப்படுத்துங்கள். அல்லது முடிந்தால் பாம்பினை கையடக்கத் தொலைபேசியில் (cell phone) புகைப் படமெடுக்க முடியுமாயின் அப்படத்தினை வைத்தியருக்கு காட்டுங்கள். இதனால் பாம்பினை சரியாக அடையாளம் கண்டு அதற்கு ஏற்ப வைத்தியர்களால் சரியாகவும், விரைவாகவும் சிகிச்சையினை வழங்க முடியும்.

அதேவேளை பாம்பு தீண்டியவருக்கு பின்வரும் விடயங்களை செய்யக்கூடாது என்பதில் கவனம் செலுத்துவது அவசியம் ஆகும். குறிப்பாக தீண்டப்பட்ட காயத்திற்கு மேல் கட்டுப்போட வேண்டாம். தீண்டப்பட்ட காயத்தை கூரிய கத்தியால் வெட்டுவது அல்லது வாயினால் உறிஞ்சும் முறையை கையாளுவதை தவிர்க்கப்பட வேண்டும். இதனால் பயன் ஏதுமில்லை அத்துடன் இது மேலும் ஆபத்தை ஏற்படுத்தும். பாம்பு தீண்டியவருக்கு மதுபானம் கொடுக்கக்கூடாது ஏனெனில் அது விஷத்தை உடலில் விரைவாகப் பரவச் செய்யும். செவ்விளநீர், இளநீர், பழரசம்கள் போன்றவற்றை கொடுக்கக் கூடாது ஏனெனில் பாம்பு தீண்டினால் சிறுநீரகத்தில் சேதம் ஏற்பட்டால் இவற்றிலுள்ள பொட்டாசியம் எனப்படும் ஒரு வகை உப்பு மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

எனவே முதலுதவி செய்யும் அதேவேளை என்னென்ன செய்யக் கூடாது என்பதிலும் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். ●

## குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பாதாம் பருப்பின் பங்கு



❖ நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு பாதாம் பருப்பை தருவது எதற்காக என்று அறிந்து கொள்ள வேண்டும். மூளையின் சக்தி பாதாம் பருப்புகளைச் சாப்பிடுவதால் அதிகரிக்கும். பொடியாக அரைத்த பாதாம் பருப்பைப் பாலில் கலந்து தினமும் பருகுவதால் குழந்தையின் உடலில் ஊட்டச்சத்தின் அளவு அதிகமாகச் சேர வாய்ப்புள்ளது. பாதாம் பருப்பு கலந்த பாலை குளிர்காலத்தில் அருந்துவதால் குழந்தையின் உடல் மற்றும் மன ஆரோக்கியம் மேம்படுவதாகக் கூறப்படுகின்றது. மேலும் குளிரைத் தாங்கக்கூடிய சக்தியைக் குழந்தையின் உடல் பெறுகின்றது.

❖ பாதாம் பருப்பில் உள்ள புரதச் சத்தானது மூளையின் இயக்க ஆற்றலை அதிகரிக்கின்றது. மேலும் நினைவாற்றல் மற்றும் மூளையின் சக்தியைப் பெருகுகின்றது. குழந்தையின் மூளையில் உள்ள செல்களில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்து அவர்களைப் புத்திசாலியாக மாற்றுகின்றது.

❖ குளிர் காலத்தில் சளி, இருமல் போன்ற தொல்லைகள் குழந்தைகளுக்கு ஏற்படுவது இயல்புதான். இந்த மாதிரி நேரத்தில் பாதாம் கலந்த பாலை குழந்தைக்குத் தினமும் பருக தருவதன் மூலம், அவர்களின் உடலின் எதிர்ப்பு ஆற்றலை அதிகரித்துக் கொள்ள முடியும். இந்த பால் சாப்பிடுவதன் மூலம் குழந்தைகள் எளிதில் குளிர்காலத்தில் நோய்த் தொற்றுக்கு ஆளாக முடியாது. ●

## சோர்வை நீக்கும் வீரபத்ராசனம்



இந்த ஆசனத்தை சரியாக செய்யாவிட்டால், இது முழங்கால் வலி மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற சில பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

**நன்மைகள்:**

☞ இந்த போஸ் சமநிலை, நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்துகிறது. இது உங்கள் கால்கள் உட்பட கீழ் உடலை வலுப்படுத்த உதவுகிறது.

☞ உங்கள் மார்பு மற்றும் நுரையீரலைத் திறப்பதன் மூலம், இந்த போஸ் உங்களுக்கு நன்மை பயக்கும்.

☞ இது முதுகுவலியைப் போக்க உதவுகின்றது. பலவீனமான இடுப்பு தசைகள் மற்றும் இடுப்பில் வலி ஆகியவை இந்த போஸ் சமாளிக்கக்கூடிய பொதுவான பிரச்சினைகள். இது சிறந்த சமநிலையையும் நிலைத் தன்மையையும் வளர்க்க உதவுகிறது. இது உங்கள் இடுப்பு மற்றும் இடுப்பு தசைகளை நீட்ட உதவுகின்றது.

☞ நீங்கள் சோர்வாக இருக்கிறீர்களா? அப்படியானால், இந்த யோகா போஸைப் பயிற்சி செய்வது உங்கள் தசைகளில் இருந்து வரும் பதற்றத்தை நீக்கி உங்களை உற்சாகப் படுத்தும்.

☞ உங்கள் நுரையீரல், இதயம் மற்றும் தசைகள் ஒழுங்காகவும் திறமையாகவும் செயல்பட அனுமதிப்பது உடல் முழுவதும் ஆரோக்கியமான இரத்தம் மற்றும் ஆக்ஸிஜன் ஓட்டத்தை பராமரிக்க உதவும். ●

## கொஞ்சம் சிரிங்க





**ராம்:** Lipstick க்கும் Eye liner க்கும் சண்டை வந்துதாம் கடைசில Lipstick தான் வின் பண்ணிச்சாம்
**சோம்:** ஏன்
**ராம்:** ஏனென்றால் வாய்மையே வெல்லும்.
**சோம்:** .....!

............................

**ஜோன்ஸ்:** புதுசா ஃபோன் வாங்கி இருக்கிறன் டா
**பீன்ஸ்:** சாம்சங்கா இல்ல ஐ ஃபோனா?
**ஜோன்ஸ்:** ஹெட்ஃபோன்

**அமல்:** மொபைல் ஃபோன்ல எந்த ஆஃப் பயன்படுத்தினா நிம்மதியா இருக்க முடியும்
**விமல்:** அது சுவிட்ஜ் ஆஃப் தான்.

.......................

**குட்டி:** டேய் எங்கடா போற?
**சுட்டி:** முறுக்கு செய்ய மாவு அரைக்க போறன்.
**குட்டி:** அதுக்கேன் ஒளிஞ்சு ஒளிஞ்சு போற?
**சுட்டி:** அம்மா தான் மாவ நைசா அரைக்கச் சொன்னாங்க.

.........................

**மகன்:** கணக்கு பாடம் சொல்லித்தாங்கப்பா
**அப்பா:** எனக்கு கணக்குப்பாடம் தெரியாதுப்பா
**மகன்:** உனக்கு மட்டும் எவ்வளவு நல்ல அப்பா அம்மா கிடைச்சிருக்காங்க...!

**ரமேஸ்:** நேற்று பேஸ்புக் பார்த்திட்டே பக்கத்து வீட்ல நுழைஞ்சிட்டன்.
**சுரெஸ்:** பிறகு
**ரமேஸ்:** அந்த அம்மா வட்ஸ்அஃப் பார்த்திட்ட டீ போட்டுத் தந்தாங்க.

..........................

**பேபி:** வாய் எதுக்கும்மா இருக்கு?
**அம்மா:** கதைக்கிறதுக்குடா செல்லம்
**பேபி:** வாம்மா வந்து ரீச்சர்ட சொல்லும்மா எப்ப பார்த்தாலும் கதைக்கிறன் என்டு திட்டுறாங்க.

## மன்னா விளம்பரப் பலகை

வெற்றி என்னும்
வேட்கை உன்னுள்
இருக்கும் வரை
தோல்வி என்னும்
தடைகள்
உன் கண் முன்னே
காணப்படுவது
இல்லை...

உன்னைப் புரிந்து
கொள்ளாத எதுவும்
உன்னிடம்
நிலைப்பதில்லை
உன்னைப் புரிந்து
கொண்ட எதுவும்
உன்னை விட்டு
விலகுவதுமில்லை...

சிலரிடம் சில
விசயங்களை
புரிய வைக்க
கஸ்டப்படுவதை விட
சிரித்து விட்டு
கடந்து செல்வதே
சிறந்தது...

உன் அறிவு
உனக்கு மட்டுமே
பயன்படுமானால்
அது பல மடங்கு
பெருகுவதற்கு
வாய்ப்பே
இல்லை...


## மன்னா வாசகர்களே!

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## "நாற்பதின் சிகரமே வாழ்க"

சீர்பெறும் வடபுலத்தின்
நெய்தலும், மருதமும், முல்லையும்
கொஞ்சி விளையாடும்
தொன்மொழியாம் தமிழ்மொழியின்
வாழிடம் எம் மறைமாவட்டம்
ஆன்றோரும், சான்றோரும்
கவிபுனைந்து, கதை எழுதி, இசையமைத்து
ஒப்பில்லா ஜோதியாம் தேவபரன்
புகழ் ஒலிக்கும் மறைமாவட்டம்
எம் மன்னார் மறைமாவட்டம்

புனித யோசேவ்வாசின்
தூய பாதம் பட்ட மன்னாரும் வவுனியாவும்
மறைமாவட்ட ஆட்சிப்பீடம்
உண்மைக்கு சான்று பகிர்ந்த
உத்தமர்கள் வாழ்ந்த இடம்
வேதத்தின் சாட்சிகளாய் உயிர்த்தியாகம் செய்த புனித இடம்
தூயவர்கள் சிந்து குருதி, தூய்மையின் விதையுமாகி
மரமாகி கிளைபரப்பி, விருட்சமாகி
ஆயிரத்து எண்பத்தொன்றில்
மறைமாவட்டமான தூய தலம்

நாற்பதில் சிகரம் தொடும்
எங்கள் மறைமாவட்ட வளர்ச்சிதனை
என்னென்று சொல்வேன் வார்த்தையதால்
குருத்துவத்தின் பூந்தோட்டம் எங்கள் மறைமாவட்டமே
ஊரிலும் எம் குருக்கள், உலகிலும் எம் குருக்கள்
உத்தமனாம் இயேசுவின் ஆசி பெற்றதும்
எம் மறைமாவட்டமே
நாற்பதாம் அகவையில் நடைபயிலும் மறைமாவட்டம்
நாதன் இயேசுவின் அருளாலே நற்பணியில் நடைபயின்று
எத்திசையும் இறை பரப்ப உளமாற வாழ்த்துகின்றோம்

உயர் மறையே வாழ்க, வாழ்க
விறுகொண்ட எம் கத்தோலிக்கம்
வியப்புடனே வாழ்க, வாழ்க
உத்தமனார் எம் ஆயர்
உவப்புடனே வாழ்க வாழ்க
குருமணிகள் தானும் வாழ்க
உடன் உழைக்கும் கன்னியரும்
பங்கானர் பொதுநிலையினர் பணியும்
என்றென்றும் வாழ்க, வாழ்க
இறையவனின் நிறையாசீர்
எல்லோருக்கும் வாழ்க, வாழ்க.

சி. சுஜீவன் மடுறோட்

## "40வது விடியலை நோக்கி"

மன்னார் எனும் புதுப்பெயர் புனைந்து
மறக்க முடியாத வரலாற்றுத்தடங்களுடன் இணைந்து
மடுத் திருப்பதியைப் புனித பூமியாகக் கொண்டு
மங்கா ஒளியுடன் திகழும் எம் மன்னார் மறைமாவட்டமே!

மாமனிதர்கள் பலரை ஈன்றெடுத்து
மாநிலம் போற்றும் உத்தமர்களாய் வளர்த்தெடுத்து
மாதவனாய் 40 ஆண்டுகளைக் கடந்த
மாசற்றோனே! எம் மன்னார் மறைமாவட்டமே!

இனக்கலவரத்தினால் மடுத்திருப்பலியில் முடங்கி
இடம்பெயர்வினால் தடுமாறிக் கலங்கி
இன்னலுற்ற போதிலும் தளராமல்
இதுவரை நிலைத்திருக்கும் மணிமகுடமே! எம் மறைமாவட்டமே!

சிறிய குருமடத்தை சிறிய வீட்டில் ஆரம்பித்து
சிலுவைகள் பலவற்றை 40 ஆண்டுகளாய் சுமந்து
சிதறிப் போன மந்தைகளை ஒன்று சேர்த்து
சிங்கமாய் வீறுநடை போடும் எம் மறைமாவட்டமே!

அணையா விளக்காய் எப்போதும் ஒளிர்ந்து
அனைவர் மனதிலும் அழியா இடம்பிடித்து
அன்னையாய் எம்மைச் சுமந்து 40வது ஆண்டுடிற்குள்
அடியெடுத்து வைக்கும் எம் மறைமாவட்டத் தாயே!

**அன்னையே! வருக! வருக!**
**உன் பணி வளர்க! வளர்க!**

ஜெனிங்ஸ் அபிஷானி
குழந்தைஇயேசுபுரம், மன்னார்.

## மறைகாத்த மண்ணே உனை மனதார வாழ்த்துகின்றோம்

யாழ் மறை நிலத்தின் ஒரு விதையாயிருந்து
1981இல் தனி மரமாகி நிலைத்த எம் விளைநிலமே
உன் விசுவாச பயணத்தின் தடங்களில்
நால் பத்து வருடங்கள் கடந்ததுவே.

முதல் ஆயர் மேதகு தோமஸ் ஆண்டகைக்கு
எம் தந்தை சேவியர் குரூஸ் அடிகளார்
குருமுதல்வராய் துணைபுரிய – தலைசிறந்து விளங்கியது
நம் மறை மண்ணாம் மாண்புமிகு மன்னாருமே

திருத்தந்தை ஆசீருடன் இரண்டாவது ஆயராய்
மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையுமே
நல்லாயனாகிட சிறந்த துணையாக
நம் தந்தை விக்ரர் சோசை அடிகள் குருமுதல்வரானரே.

வடக்கின் விளைநிலமாய் – மறைசாட்சிகளின்
பூமியாய் தலைநிமிர்ந்த மன்னாரையே
தன் அப்போஸ்தலிக்க பணிதந்து நிறைவாக்கினார்.
எம் பரிபாலகராய் மேதகு கின்சிலி ஆண்டகையே

அறுநூறு கிறிஸ்தவர்கள் தம் ஆருயிர் ஈர்ந்த
எம் மறைமண்ணில் அவர்களும் புனிதர்களாகிடவே
நல் முயற்சிகள் செய்கின்றார் – எம் அன்பு
ஆயர் தந்தை மேதகு இம்மானுவேல் ஆண்டகையே

உதயத்தில் ரூபி யூபிலி காணும் விளைநிலமே — உனில்
மடிந்த வித்துக்கள் புனிதத்துவ விருட்சமாகிடவே
நின் பயணம் மேலும் தொடர்ந்திடவும்
யூபிலி ஆண்டில் உளமாற வாழ்த்துகின்றோமே.



எ. ஜெஸ்மிலா - பெரியமுறிப்பு.

## மீண்டுமா வந்தாய் கொரோனாவே



மனிதனை கொத்தடிமை ஆக்கிய கொரோனாவே
உயிர்களை கொன்றொழிக்க மீண்டும் வந்து விட்டாயே
உயிர்களின் உன்னதம் உனக்கு புரியவில்லையே
உறவுகளின் தவிப்பு உனக்கு தெரியவில்லையே

வீட்டிலிருந்து வெளியே செல்ல போராட்டம்
முகக் கவசமும், முன்னெச்சரிக்கையுமே முகமூடி
இடைவெளி இல்லா எம் மனித சமுதாயம்
இன்று இடைவெளி பேணியே வாழ்கின்றது

உறவுகள் உவப்பற்று போனதே
நோயாளரும் கர்ப்பிணிகளும் நொந்து விட்டனரே
கொடிய அரக்கனே கொரோனாவே
ஒழிந்தாய் உன் ஆட்டம் சில மாதங்களிற்கு
முன் முடிவுற்றது என்று எண்ணினோமே
மீண்டும் தலை தூக்கி விட்டாயே

அடிமையாக்கி எம் மனித இனத்தை அழித்திட
எண்ணாதே அழிந்தொழிந்து போவாய்
புதுயுகம் ஒன்று தோன்றத்தான் போகின்றது
புத்தொழியும் புது வாழ்வும் வரத்தான் போகின்றது

வசந்தமாய் மனித உறவுகள் வாழத்தான் போகின்றது
வாய்மூடி ஓடிட எப்போதும் தயாராய் இரு
அரக்க கொரோனாவே !

P. அன்ரனி குரூஸ் சரன்சலாமேரி
துட்டுவாகை.

**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை
காலம் தாமதிக்காமல் உடனடியாக
வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

## மனிதன்



மகத்தான மனிதனின் மாண்பான உணர்வுகளை
மதித்து நடக்காமல் மிதித்துபோகும் போது அங்கு
மனிதம் மடிகின்றது !!

மனிதனை மனிதனே
கொலை செய்வதாலும்
னித மாண்புகளை துஸ்பிரயோகம் செய்வதாலும்
அங்கு மனிதம் மடிகின்றது !!

உண்மைக்கு பதில் பொய்மையும்
நீதிக்கு பதில் அநீதியையும்
நிலை நிறுத்திவைத்து
குலை நடுங்க செய்யும் மானிடரால்
மனிதம் மடிகின்றது !

மானிட மனங்களின் உணர்வுகளுக்கு
மகத்துவமான மரியாதை செய்து
மனித மாண்புகளை மதித்து
மனித நேயத்தோடு வாழும்போது அங்கு
மனிதம் மலர்ந்து நிற்கின்றது !

அ. ஜஸ்மின் ஷறோன் – ஆவணம், நானாட்டான்.

## மனித நேயம் உலகில் மடிகின்றது

மண்ணில் ஆன்மீகம் அருகிப் போகின்றது.
கலங்கும் உள்ளங்கள் அன்பிற்காய் ஏங்குகின்றது.
இரக்கமும் தாழ்ச்சியும் தவிடு பொடியாகின்றது.
சிந்தனை வாழ்வின் விழிம்பைத் தொடுகின்றது.

கொரோனா மகிழ்ச்சியால் குதூகலிக்கின்றது.
குவலயம் எங்கும் வாழ்வை எண்ணித் தவிக்கின்றது.
மனித வாழ்வு நிலைக்கும் என உள்ளம் சொல்லுகின்றது.
மனச்சான்று எமக்குப் பாடம் புகட்டுகின்றது.

நிலையில்லா வாழ்வை மனம் எண்ணுகின்றது.
தவறுகள் எம் உள்ளக்கதவைத் தட்டுகின்றது.
இறைவனின் சாயல் எம் கண்முன் தோன்றுகின்றது.
முடிவில்லா இறைவாழ்வை எண்ணிப் பயம் கொள்ளுகின்றது.

அ. கெவின் துவாராகா – காத்தான்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.219
## எரேமியா (அதிகாரம் 1 முதல் 7 முடிய)

உங்கள் விடைகளை பங்குனி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01 | | | | | | 02 |
| 03 | | | | 04 | | | | | ✸ | |
| | 05 | | | | 06 | | | | | |
| | | 07 | | | | | | 08 | | |
| | | | ✸ | 09 | | | | | | |
| | | | | | | 10 | ✸ | | 11 | |
| | 12 | | | | | | | 13 | | |
| | | | 14 | | ✸ | | | | | 15 |
| | | | | | 16 | | | 17 | | |
| | | 18 | | | | 19 | | | | |
| 20 | | | | 21 | ✸ | | | | 22 | 23 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. ஏனெனில் உன்னை விடுவிக்க நான் .......... இருக்கின்றேன்.
4. ஆ! என் தலைவராகிய ஆண்டவரே நீர் இம்மக்களையும் எருசலேமையும் முற்றிலும் ............................ விட்டீர்.
5. உங்கள் .................... கள் எனக்கு ஏற்புடையவை அல்ல.
6. கணவனும் மனைவியும் ................ வயது நிறைந்தோரும் பிடிபடுவர்.
7. இம்மக்களின் சடலங்கள் ...................... பறவைகளுக்கும் நிலத்து விலங்குகளுக்கும் இரையாகும் (2ம் எழுத்து 1ம் எழுத்துக்கு முன் உள்ளது).
9. நான் கட்டளையிட்ட .................... அனைத்தையும் கடைப் பிடியுங்கள்.
13. எனினும் உன்மேல் ..................... கொள்ள அவர்களால் இயலாது (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
19. ஒன்றுகூடுங்கள் ................................ சூழ் நகர்களுக்குச் சென்றிடுவோம்.
20. மாசற்ற வறியவரின் இரத்தக்கறை உன் மேலாடை .......................... களில் காணப்படுகின்றது.

### மேலிருந்து கீழ்
2. சீயோனுக்கு நேராகக் .................................... உயர்த்திப் பிடியுங்கள்.
3. என் இதயத்திற்கேற்ற ........................ களை உங்களுக்குக் கொடுப்பேன்.
5. உங்களின் மற்றைய பலிகளும் ........................... உவகை தருவதில்லை.
7. இதோ பார் என் சொற்களை உன் .............. வைத்துள்ளேன்.
8. அவர்கள் அனைவரும் ...................... வாய்ந்தவர்கள்.
12. உங்கள் .................யும் செயல்களையும் சீர்ப்படுத்துங்கள்.
14. எருசலேமுக்கு எதிராக முற்றுகைத்தளம்.................. ங்கள்.
15. முன்னோக்கிச் செல்வதற்குப் .................... பின்னோக்கிச் சென்றார்கள்
16. பாலைநிலத்தின் மொட்டை .................. களிலிருந்து அனல் காற்று என் மக்களாகிய மக்கள்மீது வீசும்.

### கீழிருந்து மேல்
8. நான் சொல்லிவிட்டேன் இதுபற்றி ..................... மாட்டேன்.
11. சேபா நாட்டுத் ............... தூரத்து நாட்டு நறுமண நாணலும் எனக்கு எதற்கு?
15. ஆண்டவரே உம் கண்கள்........... அன்றோ நோக்குகின்றன.
18. மகள் சீயோனை வளமான .................தரைக்கு ஒப்பிடுவேன்.
19 .................. கள் வளம்பெறும் வகையில் அவர்கள் வழக்கை விசாரிப்பதில்லை.
20. ஏனெனில் உன்னை............. நான் உன்னோடு இருக்கிறேன்.
21. இஸ்ராயேல் வீட்டாரும் யூதா...................... எனக்கு எதிராக நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டனர். (2வது எழுத்து இறுதியாக உள்ளது).
22. நைல்நதி நீரைக் குடிக்க இப்போது நீ எகிப்துக்குச் செல்வதால் உனக்கு ........................ பயன் என்ன?

### வலமிருந்து இடம்
1. தாய் வயிற்றில் உன்னை நான் ............................ முன்பே அறிந்திருந்தேன்.
2. நான் அவர்கள் மூதாதையருக்கு உரிமைச் சொத்தாகக் .......................நாட்டுக்கு வட நாட்டிலிருந்து ஒன்றாக வந்து சேர்வர் (2வது எழுத்து இறுதியாக உள்ளது).
4. குன்றுகளிலிருந்தும் மலைகளில் செய்யப்படும் அமளிகளி லிருந்தும் கிடைப்பது..................................
8. இது என்றென்றும் உள்ள ஒரு ...........................................
10. செழிப்பான நாட்டுக்கு அதன் ..............................யும் நலன்களையும் நுகருமாறு நான் உங்களை அழைத்து வந்தேன்.
13. உங்கள் தீச்செயல்களை முன்னிட்டு என் சீற்றம் நெருப்பென ..............................ப் பற்றியெரியும்.
15. வாளையும் ..................... யும் நாம் காணப்போவதில்லை.
17. என் வாக்கைச் செயலாக்க ................... விழிப்பாயிருப்பேன். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன் உள்ளது)
23. உங்கள் ................... உங்களுக்கு நன்மை வராமலிருக்கச் செய்தன.

### விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 217 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
நி.யாழிசன்,
செட்டிகுளம்.

**இரண்டாம் பரிசு:**
சி. டொறின்,
வவுனியா.

**மூன்றாம் பரிசு:**
ய. சிரோன் சிவோன்
பறப்பாங்கண்டல்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 107 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 95 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.217ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. க. ஜக்லின் ஜினுவிக்கா –நானாட்டான்.
2. ச. பத்திநாதன் பீரிஸ் - பெரியபண்டிவிரிச்சான்.
3. J. ஜெயலூசியா –வவுனியா.
4. N.G. மரியம்மா பீரிஸ் - வங்காலை.
5. வி. மேரிறெஜினா –சின்னப்பண்டிவிரிச்சான்.
6. J.P. சுஜீவன் குரூஸ் - தாழ்வுபாடு.
7. G. ஜொகிஷா –சிறுத்தோப்பு
8. G.S. மேரி நிலுக்ஷா –சிறுத்தோப்பு
9. கி. கிசானி –பெரியகுஞ்சுக்குளம்.
10. றா. ஹறிஸ்மா டலிமா –வங்காலை.
11. N. கவிஷன் பெனாண்டோ –சிலாவத்துறை.
12. றி. ஜெசிக்கா - சின்னப்பண்டிவிரிச்சான்.
13. J. பிரவின் - சிலாவத்துறை.
14. ப. லூசியா செலின் - பெரியபண்டிவிரிச்சான்.
15. J. எரோனிசா சோசை –வங்காலை.
16. ராணி அரசரத்தினம் - பெற்றா.
17. G. ஸ்ரெபி –கொன்னையன் குடியிருப்பு
18. T. யுவேதன் - நானாட்டான்.
19. ம. ஜோசப் பிரசாத் றோச் - பள்ளிமுனை.
20. கு. சிந்தியா –பெரியபண்டிவிரிச்சான்.
21. V. லியாஷா கேசேல் - பள்ளிமுனை.
22. J. ருபேன்சல் சோசை –வங்காலை.
23. நி. ஸ்ரெலாமேரி –வவுனியா.
24. அ. கில்டா –கட்டையடம்பன்.
25. பி. நித்தியானந்தன் குரூஸ் - வங்காலை.
26. ஜெனிங்ஸ் அபிஷானி –குழந்தையேசுபுரம்.
27. A. நிஷாந்தினி றோச் - பள்ளிமுனை.
28. அ. பிறிந்தாவீர்ஜினி டயஸ் - வங்காலை.
29. எ. ஜெய்மென் ராஜா - அளவக்கை.
30. றி. ஆன் ஆஸ்லின் துரம் - முள்ளிக்குளம்.
31. றபேக்கா பற்றிக் - சின்னக்கடை.
32. கு. பரமெஸ்வரி –பெரியபண்டிவிரிச்சான்.
33. றா .மேரிபிறக்சி டயஸ் - வங்காலை.
34. அ. பிரதிஸ்கா டயஸ் - வங்காலை
35. சி. நோயல் கிறிஸ்ரிறோச் - பள்ளிமுனை.
36. A. அன்ரனி –பறப்பாங்கண்டல்.
37. A. தர்ஷினி பெரேரா –வங்காலை.
38. R. ஜெகநாதன் - அளவக்கை.
39. அகிலன் நிஷாந்தினி –பேசாலை.
40. அ. இருதயமேரி – முல்லைத்தீவு
41. யூலியஸ் லிபின்சன் - தேவன்பிட்டி.
42. J. டிகான்சன் சோசை –வங்காலை.
43. V. நிவின்ஸ்ரெலா பறுனாந்து – முத்தரிப்புதுறை
44. ய. யக்ஷி யஸ்மினா – பறப்பாங்கண்டல்
45. எ. ஜெனோலின் - அளவக்கை
46. A. மேரி சோபியா – பறப்பாங்கண்டல்
47. கு. டினோஷன் - பெரியபண்டிவிரிச்சான்
48. A. புளோறன்ஸ் - நானாட்டான்.
49. அ. குணசிங்கம் - பெரியபண்டிவிரிச்சான்
50. கு. நிதர்ஷன் - பெரியபண்டிவிரிச்சான்

# செபம்

அருட்சகோ. சிலோசினி குகதாஸ்
(SSJV)

### செபம் என்றால் என்ன?

செபம் ஒரு அருட்கொடை, செபம் ஒரு உரையாடல், இறை உறவை மையப்படுத்தும் இதய பூர்வமான உரையாடல், செபம் ஓர் இறை அனுபவம். இது இறை அன்பினால் உந்தப்பட்டு இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கச் செய்வது. உணர்வுகளும், சிந்தனைகளும் சங்கமிக்கும் ஒருநிலை. மூவொரு இறைவனோடு கொள்ளும் உறவின் வெளிப்பாடும் அந்த உறவில் உதயமாகும் உயிருமாகும். ஈற்றில் செபம் ஒரு ஏக்கமும், ஏற்றமுமாகும்.

விஞ்ஞானிகள் ஒரு சிலர், நவீன கம்பியூட்டர் சாப்ட்வேர்



ஒன்றை கண்டுபிடித்தனர். அதன் மூலம் யாரிடமும் கேள்வி கேட்கலாம். எந்த கோள்விக்கும் அந்த கம்பியூட்டர் விடையளிக்கும் என்ற மகிழ்ச்சியில் மிதந்த அவர்கள் ஆவலோடு அதனிடம் முதல் கேள்வியை செலுத்தினர். அந்த கேள்வி - இறைவா உலகம் முதலில் எப்படி உருவானது? என்பது தான். அதற்கு பதில் வந்தது. "விவிலியத்தில் ஆதியாகமத்தைப் பார்" "இறைவா என்றும், எப்போழுதும் செபிக்கவேண்டிய முறையில் நான் செபிக்க அருள்புரியும்" ( புனித அல்போன்ஸ் லிகோரி)

### யாருக்காக செபிக்க வேண்டும்?

நமக்காக – நாம் நம்மை ஏற்றுக்கொள்ள நம் அழைத்தல் பற்றி தேர்ந்து தெளிய - இல்லற வாழ்வா? துறவற வாழ்வா? தனி வாழ்வா? என்றறிய நம் தனித் தன்மைகளை இனம்கண்டு கொள்ள நம்முடைய அன்றாட தேவைகளுக்காக

பிறருக்காக – நம் குடும்பத்திற்காக, நமது உற்றார் உறவினர்களுக்காக, நண்பர்களுக்காக, நம் சமூகத்திற்காக, திருச்சபைக்காக, நற்செய்திபணியில் ஈடுபடுபவர்களுக்காக, துன்பப்படுகிறவர்களுக்காக, நம்மை திகில் அடைய வைத்துக் கொண்டிருக்கும் இந்த கொடிய கொரோனா கொள்ளை நோய் விலக, உலகத்திற்காக, நம் நாட்டிற்காக, நம் மன்னார் திருச்சபைக்காக.

உயிர் வாழ்பவருக்காகவும், இறந்தவர்களுக்காகவும் - இவ் உலகில் பல்வேறு வேதனைக்குள்ளாக்கப்பட்ட மக்கள், சிறைச்சாலைகளில் வாடுவோர், ஏழைகள், விதவைகள், அநாதைகள், வயோதிபர்கள், சிறுவர்கள், இளைஞர்களுக்காக இன்றும் கார்த்திகை மாதமானது எம் திருச்சபையில் இறந்த ஆத்துமாக்களுக்காக மன்றாடும் விசேட காலமாக இருக்கின்றது. எனவே இறந்து போன எம் உறவுகள், யாரும் நினையாத ஆன்மாக்கள், உத்தரிப்பு நிலையில் உள்ளவர்கள் அனைவருக்காவும்.

### அன்பே வடிவான இறைவா

தளராத மனத்துடன் வாழ எமக்கு கற்றுத்தாரும். உம் தகுதிக்கு ஏற்றவாறு நான் உமக்கு பணிபுரிய எனக்கு கற்றுத்தாரும். பலனை எதிர்பார்காமல் பிறருக்கு கொடுக்கவும் உருவாகும் காயங்களை எண்ணாமல் போரிடும் நேரம் போரிடவும், ஓய்வை நினைக்காமல் உழைக்க வேண்டிய அளவு உழைக்கவும், புகழைத் தேடாமல், முழுமையாக பணிபுரியவும் கற்றுத்தாரும். (புனித லொயோலா இஞ்ஞாசியார்)

❖❖❖❖❖❖

2ம் பக்கத் தொடர்ச்சி

### அருட்பணி. மா. றேஜிஸ் இராஜநாயகம்...

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகளார் அண்மையில் "யாதுமானவன்" மற்றும் "வெற்றியின் இரகசியம்" என்ற இரு புதிய நூல்களை படைத்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டம் சார்பாக அடிகளார் அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றி வரும் சேவையை பாராட்டுவதோடு மென்மேலும் எழுத்துலகில் பல புதிய படைப்புக்களை பிரசவிக்க வாழ்த்துகின்றோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 23.10.1942 மறைவு: 12.01.2021



### திரு.M.மரியான் சந்தியாப்பிள்ளை
(தலைமன்னார் மேற்கு)

அன்புக்கு இலக்கணமாய், பாசத்திற்கு இருப்பிடமாய்
பாரினில் பல்லாண்டு வாழ்ந்து பரமனின் பாதம்
சரணடைந்தீர்கள்...
நித்தியமும் வான்வீட்டில் இளைப்பாற நித்தமும் நாம்
இறைவனை இரஞ்சுகின்றோம்...

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 02 1937 — இறப்பு 19 01 2021



### திருமதி. அந்தோனிப்பிள்ளை ஜெயசீலி
(இத்திகண்டல், அடம்பன்)

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் மகுடமாய் எம் குடும்பத்தின் சுடர் விளக்காய் இகமதில் வாழ்ந்த எம் அம்மாவே! இரக்கமும் கருணையும் இதயமாய்க் கொண்டு பகிர்வும் பாசமும் பண்பாய் அமைந்த அகல் விளக்கே அம்மாவே! இறைபக்தியுடன் கூடிய நல் ஒழுக்கத்துடன் இகமதில் நாம் வாழ வழிசமைத்த அம்மாவே! உன் புன்னகை காட்டாமல் கண்விழி மூடிவிட்டாய் உம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் யாம் புழுவாய்த் துடிக்கின்றோம். எம் கண்களில் நீர் பனிக்க கடவுளின் இல்லத்தில் உம் ஆன்மா இளைப்பாற பிரார்த்திக்கின்றோம் அம்மா...

பிரிவால் நினைந்துருகும்: பிள்ளைகள், அருட்சகோதரி, அருட்தந்தை, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 40ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 19 12 1963 — விண்ணில் 04 01 2021



### திரு. மிக்கேல் கபிரியேல் தற்குரூஸ் [பாக்கியராசா]
(தரவன்கோட்டை, மன்னார்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா 116:15)

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே! பொதுநலம் காத்திட்ட குலநாயகனே, எமக்கு எல்லாம் ஆனவரே, கள்ளம் இல்லா உள்ளத்தினரே, கடவுள் வழியைத் தேர்ந்தீரே. இறைபணி நிறைவாய் புரிந்தவரே, மண்ணில் வாழ்ந்து சென்ற நல் இதயமே, விண்ணில் இறைவன் இன்பம் தருவார். பண்பின் இதயமாய், பாசத்தின் மகுடமாய் எம்மை வாழ்வித்த தெய்வம் நீரல்லவோ! ஆன்மீகக் காரியங்களில் உங்களது அக்கறையும், கரிசனையும் அளப்பரியது. உம் வாழ்நாள் முழுதும் செபத்தில் வாழ்ந்து, இடையிலே இறைவன் அழைத்தாரோ இறுதியில் இறைவனிடம் சென்றுவிட்டீரே ஐயா. நோயென்று படுக்காது, யாரையுமே வருத்தாது, அமைதியில் இளைப்பாறிட, எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நல்ல மரணத்தைக் கொடுத்தருளினார். கர்த்தராம் யேசுவிடம் கனிவுடன் எமக்காய் வேண்டிடுவீர், எம்மில் நீங்காத நினைவுகளாய் உயிரில் கலந்த எம் அன்பு தந்தையே உம் ஆன்மா இறைசந்நிதியில் இளைப்பாறிட செபிக்கிறோம்.

பிரிவால் நினைந்துருகும்: அம்மா, மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரன், சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 07 1945 — உதிர்வு 07 02 2020



### அருட்சகோ. அன்ரோனியா குருஸ் (சறோஜா) இறைபராமரிப்பு சபை

ஆண்டவன் அழைப்பின் ஆனந்தக் குரல் கேட்டு
இறைபணியாற்ற விரைந்திட்ட எம் அன்பு சகோதரியே
இறைபணி முடித்து இறையடி விரைந்தீர்களோ...
உங்கள் இழப்பின் துயரால் வாடுகின்றோம் என்றும்
இறை சந்நிதியில் உங்கள் ஆன்மா இளைப்பாற
செபிக்கின்றோம் நாளும்

பிரிவால் துயருறும்
சகோதரர், உறவினர்கள், நண்பர்கள்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 11 1947 — உதிர்வு 25 02 2019



### திரு.மத்தேசுப்பிள்ளை சூசைரெட்ணம்
(கட்டைக்காடு)

அன்புக்கும் அறிவுக்கும் இலக்கணமாக
வாழ்ந்த எங்கள் அப்பா! அன்போடும் பண்போடும்
எம்மை வழிநடத்திய அப்பா! ஈராண்டு கடந்தாலும்
உம் குரல் எம் காதில் ஒலிக்கின்றதப்பா!
எங்கள் உயிர் உள்ளவரை எங்களோடு
எங்களுக்குள்ளே தான் வாழ்வீர்கள் அப்பா!
உங்கள் ஆன்மா விண்ணகத்தில்
இன்பம் பெற செபிக்கின்றோம்...

பிரிவால் நினைந்துருகும்
அன்பு மனைவி, மகன் அருட்பணி.நியூட்டன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்

## 11, 11½ ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| திரினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு) | ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா) |
|---|---|
| மலர்வு : 29.04.1952 | மலர்வு : 27.08.1945 |
| உதிர்வு : 08.02.2010 | உதிர்வு : 06.08.2009 |

[கொன்வென்ட் வீதி, மன்னார்.]

'இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ எமக்கே சொந்தம்"

அன்பான தெய்வங்களே!
எம்மைவிட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் ஆனாலும்
எம்மை விட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்,
சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார்,உறவினர், நண்பர்கள்.

தகவல்: கசியன் பிலிப்புப்பிள்ளை, லண்டன்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்/சிறுக்கண்டல் றோ.க.த.க. பாடசாலை வெட்டுப்புள்ளிக்கு மேல் அதிக வீதத்தில் மாணவர்களை சித்தியடைய செய்ததில் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் 9 மாணவர்கள் தோற்றியதில் 8 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

ஜெகன் ஆன் லக்சாஜினி, டேவிட் டிகானா, அருள்ராஜன் ஸ்ரெபானி ஆகியோர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களின் வெற்றியில் தங்களது அர்ப்பணிப்பான சேவையை நல்கிய கல்லூரி அதிபர், திரு.சவிரியான் எமில்றாஜ் லோகு, வகுப்பாசிரியர் திருமதி. சகிலா கிறிஸ்ரி அன்ரன் மற்றும் ஏனைய ஆசிரியர்கள், பிள்ளைகளின் பெற்றோர், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். •

1ம் பக்கத் தொடர்ச்சி

### 40 ஆண்டுகளை நிறைவு செய்யும்

பின்பு ரூபி யூபிலி விழாவை முன்னிட்டு யூபிலி மலர் மற்றும் வரலாற்று குறிப்பேடு போன்ற இரண்டு நூல்கள் வெளியீடு செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அதற்கு அமைவாக "Historical Directory of the Diocese of Mannar" என்ற வரலாற்று குறிப்பேடு நூலுக்கான வெளியீட்டு உரையை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் வழங்க, மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் வத்திக்கான் திருப்பீடப் பிரதிநிதி அவர்களுக்கு நூலை வழங்கினார். பின்னர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.செல்வம் அடைக்கலநாதன், திரு.வினோ, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்டான்லி டிமெல், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.பிறெட்லி ஆகியோருக்கு வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. •


## வாசகர்களின் கவனத்திற்கு

மன்னா பத்திரிக்கையில் ஆக்கங்களை விளம்பரங்களைப் பிரசுரிக்க விரும்பினால் அவற்றை குறித்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து



திரு. திருமதி.
அன்ரன் பெல்டானோ
எலிசபெத் மிராண்டா
06.02.1971 - 06.02.2021

இனிய இரு உள்ளங்கள்
இல்லறமே நல்லறம் எனக் கண்டு
இறை ஆசியுடன் ஐம்பது ஆண்டுகளைக்
கடந்து சவால்களை சாதனையாக்கி
அன்பைப் பெருக்கி நற்சுகத்தோடு
மகிழ்ந்து சுற்றமும் போற்றிட
திரு, திருமதி. அன்ரன் பெல்டானோ,
எலிசபெத் மிராண்டா ஆகிய நீர் இருவரும்
பாரினில் பல்லாண்டு காலம் வாழ்ந்திட
மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்: சகோதரர்கள், பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி. மரியம்மா யேசுதாசன்

(பரிகாரிகண்டல், முருங்கன்)

மலர்வு 1939.07.25 — உதிர்வு 2020.02.27



அன்பு என்றால் அம்மா, அம்மா என்றால் அன்பு உம் கருவறையில் எமை சுமந்து அவனியிலே எமை பெற்றெடுத்து உம் அரவணைப்பிலே எமை காத்து உம் பாசத்தாலே எமை வளர்த்து உம் இனிய பண்பாலே எமை வழிநடத்தி, உம் குணத்தால் எமை உயர்வித்து உம் சிரிப்பாலே எமை மகிழ்வித்து உம் நேர்மையாலே எமை வழிநடத்தி எமக்காக வாழ்ந்தீரே அம்மா, உமக்கென்று ஏதும் கொண்டதில்லையே உம் வாழ்நாளில் ஏன் அம்மா பாரினிலே எமை தவிக்கவிட்டுச் சென்றீர். உம் பிள்ளைகள் இங்கு தவிக்கின்றோம் உம் அன்பு முகம் காண வாரும். அம்மா எம்மை விட்டு நீர் சென்று ஓராண்டு மறைந்ததே எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உம் அன்பு என்றுமே எம்முடன் வாழும் உம் ஆன்மா இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
உங்கள் அன்பான பேரப்பிள்ளைகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 | 14 |
| 08 | 02 |
| 1958 | 2020 |



### திரு. சில்வேஸ்ரர் டொன்பொஸ்கோ சோசை (றஞ்சன்)

(வங்காலை)

"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்த்தெழுகிறது"
(1கொரி 15:42)

புன்னகை பூத்த முகமே ஐயா! அப்பா என்றழைக்க இன்று நீங்கள் இல்லையே ஐயா! எம்மை பாரினில் தவிக்க விட்டு இறைவன் வீட்டில் இன்பமுடன் வாழ விரைந்திட்டீரோ ஐயா! காலமெல்லாம் நிழல் போல் இருந்து எம்மைக் காத்திருப்பீர்கள் என்றிருக்க கண்ணிமைக்கும் நேரத்தில் கண்ணீர் துளியானீர்கள் ஐயா! உம் நேச உறவுகளை தவிக்கவிட்டு எமக்காய் பரிந்துரைக்க படைத்தவரிடம் விரைந்திட்டீரோ ஐயா! ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது ஐயா! உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெற இரந்து வேண்டுகின்றோம் இறைவனையே!

பிரிவால் நினைந்துருகும் : பாசமுள்ள மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 24 |
| 07 | 01 |
| 1981 | 2018 |



### திரு.மரியாம்பிள்ளை செபஸ்ரியான் (நிக்சன்)

(இசைமாலைத்தாழ்வு)

குடும்பத்தின் ஆண்மகனாய், குலவிளக்காம் உன் பொறுப்பில் நாமிருக்க, நீர்க்கதியாய் இவ்வுலகில் எமைவிட்டு சென்று நீ ஆண்டுகள் மூன்று சென்றுவிட்டதையா. சுகமாகி வீடு வருவாய் என ஒரு மாதம் காத்திருந்தோம், ஒருவார்த்தை சொல்லாமல் நீ விதைத்த மரண விதையால் நாம் சிதைந்து போனோமே. இறைபக்தியில் ஓங்கிய உனக்கு மட்டும், மரணம் விதிவலிக்காய் இருந்திருக்க கூடாதா? நீதி உனக்கு கிடைத்திடவும், இறைவனின் அமைதியில் இளைப்பாறிடவும்,இறைவனை இறைஞ்சுகிறோம்

உங்கள் பிரிவால் துயருறும்
உன் அன்பு ஐயா, அம்மா, அக்கா, உற்றார், உறவினர்கள்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 | 18 |
| 07 | 02 |
| 1953 | 2012 |



### திரு.அல்பிரட் றெவ்வல் (யக்கோ)

(4ம் வட்டாரம், பேசாலை)

பாசத்திற்கு இருப்பிடமாய், துயரத்தில் மகிழ்ச்சியாய் எங்களுக்கு ஆருயிர் அப்பாவாய் எங்களை வழிநடத்திய அப்பா - ஏன் பரிதவிக்க எங்களை பிரிந்து சென்று விட்டீர் பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு மாறாதப்பா, சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்திலும் மறவாதீர்கள்...

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கா 18.02.2021 அன்று காலை 06 மணிக்கு பேசாலை புனித வெற்றியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்: அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி. இந்திரா அல்பிறட்   திரு.அல்பிறட் விஜயரட்ணம்

(பாலைக்குழி, அடம்பன்)

| | |
|---|---|
| மலர்வு: 26.05.1950 | மலர்வு: 10.07.1943 |
| உதிர்வு: 01.02.2006 | உதிர்வு: 02.01.2006 |

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம்
வழிகாட்டி பண்பாய், பாசமாய், நேசமாய்,
அரவணைத்து உயர் வாழ்வு தந்த
அம்மா அப்பாவே! உங்கள் ஆன்மா சாந்திபெற
ஆண்டவரை வேண்டுகின்றோம்...

உங்கள் பிரிவால் துயருறும்
சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 | 25 |
| 09 | 02 |
| 1941 | 1996 |



### திரு. பாக்கியம் ஜெயசீலன் பெர்னாண்டோ

(பேசாலை)

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் - மன்னார்)

காலங்கள் மாறலாம், எம் நெஞ்சில் உங்கள் கோலங்கள் மாறாது காயங்கள் ஆறலாம், உங்கள் .பிரிவு எமக்களித்த துயரங்கள் ஆறாது மண்வாழ்வு முடிந்தாலும், இறை மடியில் உங்கள் விண்வாழ்வு முடியாது அமைதியில் நீங்கள் உறங்கிடவே ஆறுதலின் ஆண்டவரை நாம் அன்றாடம் வேண்டுகின்றோம்.

"ஆண்டவர் எவ்வளவு இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர்" (தி.பா 34:8)

பிரிவை நினைந்துருகும்: அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## 60ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 | 05 |
| 04 | 02 |
| 1928 | 1961 |



### திருமதி. ரெஜினா பெர்னாண்டஸ்

(முன்னாள் ஆசிரியை) பேசாலை

ஆறு பத்து ஆண்டுகள் கடந்து விட்டது
அன்பான மம்மி நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
உங்கள் அன்பு பாசம் கருணை நாம் கண்டு
அறியவில்லை உங்கள் அழகான முகம் பார்த்து நாம்
வளரவில்லை ஆனாலும் அறுபது ஆண்டுகளாய் நாம்
வளர்ந்து வாழ்ந்து விட்டோம். என்றுமே உங்கள் பெயர்
சொல்லிட உங்கள் ஆசி வேண்டி நிற்கும்...
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டபிள்ளைகள்.

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
E-mail - mannamnrc@gmail.com/ Web: manna.lk /Fb- Mannar Catholic Media

"மன்னார் கத்தோலிக்க
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 0775338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகலவிதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org